
# இந்திய - இலங்கை ஒப்பந்தம்: ஓர் அமெரிக்க சதி

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

உதயன்



போராளி ஜனநாயகப் படிப்பு வட்டம்

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்:

# ஓர் அமெரிக்க சதி

உதயன்

ரோசா லுக்சம்பர்க் படிப்பு வட்டம்
சென்னை - 33.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் :
ஓர் அமெரிக்க சதி
(Indo - Sri Lanka Agreement:
An American Conspiracy)

ஆசிரியர் : உதயன்

© ஆசிரியர்

முதற் பதிப்பு : மார்ச் 1989

வெளியீடு : ரோசா லுக்சம்பர்க் படிப்பு வட்டம்
எம். 23/10, முத்தாலம்மன் கோவில் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600033.

அச்சிட்டோர் : பாரதி அச்சகம்
காஞ்சிபுரம்

விலை: ரூ. 5

# முன்னுரை

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் இன்று ஒரு கடுமையான சோதனைக் கட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

மொழியாலும், பண்பாட்டாலும், நீண்ட வரலாற்றாலும் அவர்களோடு பின்னிப் பிணைந்துள்ள நமது தமிழகத்தைக் கூட அவர்களால் தம் போராட்டத்திற்கான பின்னணிப் பிரதேசமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாத ஓர் அவலமிக்க நிலையை இந்திய - இலங்கை ஒப்பந்தமும் அதன் பிறகு இந்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும் ஏற்படுத்தியுள்ளன. கடைசியாக, தமிழகத்திலிருந்து தம் அரசியல் பணிகளை இந்த நாட்டின் சட்டம், ஒழுங்குக்கு உட்பட்டு செய்துவந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தவரை ஈவிரக்கமின்றி அப்புறப் படுத்தி இலங்கை மண்ணிலுள்ள இந்தியப் படையினரிடம் ஒப்படைத்துவிட்டது இந்திய அரசு. அவர்களில் ஒருசிலர் மட்டுமே - கைகால்கள் ஊனமாக்கப்பட்டு சுதந்திரமாக நடமாடமுடியாத கிட்டு போன்றவர்கள் மட்டுமே - விடுதலை செய்யப்பட்டுள்ளனர். போராளிகளின் தலைவர்களில் ஒருவரான ரஹீம் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் சிங்களக் காவல் முகாம்களில் எவ்வித விசாரணையுமின்றி அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுவதாக செய்திகள் உலவுகின்றன. ஈழத் தமிழரின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதாகப் பேசிவந்த நாம் நமது கையறுநிலையை எண்ணிக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியாமற்போயிற்று.

ஆனால் விடுதலை வேள்வித்தீயில் புடம்போட்டு எடுக்கப் பட்ட தமிழீழ மறவர்களும் மறத்திகளும் உலகின் பிறபகுதிகளிலே தம் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றுகொண்டிருக்கும் பல்வேறு தேசிய விடுதலை இயக்கங்களைப் பெரும் வியப்பிலாழ்த்தும் வண்ணம், மிகப்பெரும் நாடொன்றின் மிக வலுவான இராணுவத்தை எதிர்கொண்டு நிற்பதில் தளர்ச்சியின் சாயலையோ, சோர்வின் அடையாளத்தையோ இதுவரை காட்ட வில்லை. உலகின் எந்தவொரு நாட்டினதும் அல்லது விடுதலை இயக்கத்தினதும் அதிகாரபூர்வமான அங்கீகாரமோ, ஆதரவோ இன்றித் தம் விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் ஒரே ஒரு தேசிய விடுதலைப்

போராட்டமாக ஈழத் தமிழர்களின் போராட்டத்தை மட்டுமே குறிக்க முடியும்.

சிங்கள இனவெறிச் சக்திகள், 'அமைதி காக்கும்' இந்தியப் படைகள், காட்டிக்கொடுக்கும் கயவர்கள் - இப்படி பல்வேறு முனைத்தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்து அந்தச் சின்னஞ்சிறு தீவின் வடகிழக்கு மைந்தர்கள் தம் ரத்தத்தால் செக்கச் சிவந்த தாக்கப்பட்ட போராட்டப்பதாகையை உலக மக்கள் அனைவரின் கண்களுக்கும் தெரியும்படியாக உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். போராட்டக் களத்தில் வீழ்கின்ற ஒவ்வொரு மறவனின், மறத்தியின் உதிரத்திலிருந்தும் புதிய புதிய போர்க் குணமிக்க சக்திகள் தொடர்ந்து உதித்துக்கொண்டிருக்கின்றன. இத்தகைய வீரஞ்செறிந்த போராட்டத்தைத்தான் எத்தனை வகைகளில் கொச்சைப்படுத்துகின்றனர் இலங்கை இந்திய மண்களில் உள்ள ஆளும் கூட்டத்தவரும் அவர்களின் அடிவருடிகளும்!

இறுதி வெற்றிவரை தாம் ஓயப்போவதில்லை என அந்த இளைஞர் பட்டாளம் தம் வெற்றி எக்காளத்தை முழங்கிக் கொண்டிருக்கிறது. தமது போராட்டத்தின் தார்மீக முக்கியத்துவம் பற்றி அவர்களின் அரசியல் வேலைத்திட்டம் கூறுகிறது:

> "ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களே இன்றைய உலக வரலாற்றின் போக்கை நிர்ணயிக்கும் மாபெரும் போராட்ட சக்தியாக முக்கியம் பெறுகின்றன. ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம், இனவாதம் போன்ற அடக்குமுறை அட்டூழியங்களுக்கு எதிராக இன்று உலகின் பல அரங்குகளில் ஒடுக்கப்பட்ட சமூகங்களும் தேசிய இனங்களும் கிளர்ந்தெழுந்து புரட்சிகர சுதந்திரப் போராட்டங்களை நடத்திவருகின்றன. இந்த தேசிய சுதந்திரப் போராட்டங்கள் ஒவ்வொன்றும் தனக்கே உரித்தான யதார்த்த புறநிலைகளையும், தனித்தன்மைகளையும் கொண்டுள்ளன என்பது உண்மையே. ஆயினும் இப்போராட்டங்கள் அனைத்தும் உலக வரலாற்றின் இயங்கு நியதிக்கு உட்பட்டே செயல்படுகின்றன. இந்த வரலாற்று இயக்கமானது ஒடுக்குவோருக்கும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் மத்தியில் எழும் போராட்டமாகவே வெடிக்கிறது. ஆகவே தேசிய விடுதலைப் போராட்டங்கள் சாராம்சத்தில் முற்போக்கானவை; புரட்சிகரமானவை. ஏனெனில் அவை, மனித குலத்தின் வரலாற்று ஆன்மாவாகிய சுதந்திர வேட்கையை வெளிப்படுத்துகின்றன.

தேசிய சுயநிர்ணய உரிமை என்ற மூலாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் இன்றைய தேசிய சுதந்திரப் போராட்டங்கள் அனைத்தும் முன்னெடுக்கப்படுகின்றன. தனது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை ஒரு தேசிய இனத்திற்கு உண்டு என்ற மகத்தான சுதந்திரப் பிரகடனமாக இது அமைகிறது. இந்தத் தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்தான் தமிழீழ மக்களும் தமது சுதந்திரப் போராட்டத்தை நெறிப்படுத்தி முன்னெடுத்து வருகின்றனர்''.

ஆனால் அவர்களுக்குத் தெரியும் - இன்றைய உலக அரசியல் புனிதமான அறநெறிகளால் வழிகாட்டப்படுவதில்லை என்று; உலகின் எந்த மூலையில் ஒரு போராட்டம் வெடித்தாலும் அது சர்வதேசப் பரிமாணத்தைப் பெற்றுவிடும் என்று; அந்தந்தப் பகுதிகளில் உள்ள புவிசார் அரசியல் நிலைமைகளைக் கருத்தில் கொள்ளவேண்டுமென்று. அதனால்தான் அவர்கள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், தென்னாசியப் பகுதியில் இந்தியாவின் 'முதன்மை நிலையை' அங்கீகரிக்கிறார்கள். தமது சூழல் சார்ந்த புவிசார் - அரசியல் அரங்கைப் பொறுத்தமட்டில், இந்துமா சமுத்திரத்தை சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும் இந்தியாவின் கொள்கையை ஆதரிக்கிறார்கள். எந்த மேல்நிலை வல்லரசின் ஆதிக்கத்தின் கீழும் இப்பிரதேசம் வந்துவிடக்கூடாது என்ற இந்திய அரசின் 'அக்கறையை' அவர்கள் புரிந்துகொள்ளவே செய்கின்றனர். ஆனால் இந்தியா தானே ஒரு வல்லரசு மனோபாவத்தை வளர்த்துக்கொண்டு நியாயமான விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்குத் தன் இராணுவ இயந்திரத்தை முடுக்கிவிடும்போது, தமது உரிமையின் பெயரால், சுதந்திரத்தின் பெயரால் அப்போராளிகள் அதை எதிர்த்துப் போராடவும் செய்கின்றனர். கடந்த 18 மாதங்களாக அவர்கள் நடத்திவரும் போர் அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்று; அவர்களோ அல்லது அவர்களைத் தாங்கி நிற்கும் அந்த மண்ணோ விரும்பிய ஒன்றல்ல.

கடந்த நாற்பதாண்டுகளாகத் தம் உரிமைகளுக்காகப் போராடிவருகின்ற தமிழீழ மக்களுக்கு ஒரு சல்லிக்காசு மதிப்புகூடப் பெறாத ஒரு ஒப்பந்தத்தை வழங்கியதன் மூலம் இந்திய அரசாங்கம் செய்துள்ள அப்பட்டமான துரோகத்தைப் பற்றி எண்ணற்ற கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இங்கு தரப்படும் கட்டுரை, இந்த ஒப்பந்தம் முழுக்க முழுக்க ஒரு அமெரிக்க சதியே என்ற பார்வையை முன் வைக்கிறது. எந்தவொரு இயக்கத்தையும் சாராத, ஆனால் தமிழீழ மக்களின்

விடுதலை உணர்வைப் பிரதிபலிக்கின்ற சிந்தனையாளர்களில் ஒருவரான உதயன் எழுதிய கட்டுரை இது. தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் கதிர்வீச்சு தமிழ்ச் சிந்தனை உலகில் ஏற்படுத்திய தாக்கம் பலதரப்பட்டது. தமிழுக்குப் புதிய கவிதைகள், புதிய படைப்பிலக்கியங்கள், புதிய கலைச் சொற்கள், புதிய சிந்தனைகள் கிடைத்திருக்கின்றன. இங்குள்ள தமிழனின் சொந்த முயற்சியால் இதுவரை செய்யப்பட்டிராத, செய்ய முடிந்திருக்காத பல்வேறு மொழியாக்கங்கள் அரசியல் முதல் இராணுவக்கலை வரை ஈழத் தமிழர்களால் செய்யப் பட்டிருக்கின்றன. அரசியல் விஞ்ஞானத்திற்கு வழங்கப்பட்டுள்ள மாபெரும் பங்களிப்பாக உதயனும், அவரது நண்பர் விஜயனும் எழுதிய 'இந்துமகாசமுத்திரமும் இலங்கை இனப் பிரச்சனையும்' என்ற நூலின் திருத்தப்பட்ட பதிப்பை சென்ற ஆண்டு நமது படிப்பு வட்டம் வெளியிட்டிருக்கிறது. தமிழீழ மக்களின் விடுதலையின் பொருட்டு எல்லா இயக்கங்களும் ஒன்றுபட வேண்டும் என்ற வேட்கையை இடைவிடாது தெரிவித்து வரும் உதயன், இந்திய மக்கள்மீதும் இந்திய அரசாங்கத்தின்மீதும் ஈழத் தமிழர்களுக்கு இருந்து வந்துள்ள நம்பிக்கையையும் நட்புணர்வையும் தமது படைப்புகளில் பிரதிபலித்துள்ளார்.

அமெரிக்கா, தனது விசுவாசியான ஜே. ஆரின் ஐக்கிய தேசியக் கட்சியின் (யு. என். பி.) ஆட்சியைக் காப்பாற்றுவதற் காகக் கடந்த ஐந்தாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது என்பதற்கு நாமும் சில ஆதாரங்களைக் காட்ட முடியும்.

1984-ஆம் ஆண்டு ஜே. ஆர். அமெரிக்காவிற்கு விஜயம் செய்ததை அடுத்து, அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் மக்ஃபர்லேன் கூறியதாவது:-

> "அமெரிக்க அரசாங்கம் இலங்கையில் நிலவும் பயங்கரவாதப் பிரச்சனையை மிக ஆழமாகக் கவனத்தில் கொள்கிறது. இந்த வகையில் சாத்தியமான அனைத்து வழிகளிலும் இலங்கை அரசுக்கு அமெரிக்க அரசாங்கம் உதவி செய்யும். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக இலங்கை அரசின் அனைத்து முயற்சிகளுக்கும் அமெரிக்கா முழு ஆதர வளிக்கும்."

1987 மார்ச் 13-ஆந் தேதி அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் ஆசியாவுக்கான துணைக்குழுவிடம் (Solarz Sub Committee of House of Representatives) பேசுகையில் ராபர்ட் பேக் என்பவர் கூறியதாவது:-

''(ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை), எமது கொள்கைகளும் இந்திய அரசாங்கத்தின் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று நேரிணையானதாக உள்ளன என்பதில் கடந்த ஓரிரு ஆண்டுகளாக நாம் திருப்தியடைந்துள்ளோம்.'' (Indian Express, Madras: March, 14, 1987).

ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு சோலார்ஸ் உட்பட பல அமெரிக்க ஆலோசகர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்றனர். 1987 ஜூலை 27-ஆந் தேதி 'தினமணி'யில் வெளிவந்த ஒரு செய்தியை இங்கு முழுமையாகத் தருவது பயனுள்ளது. [இச்செய்தியில் குறிப்பிடப்படும் 'வலதுசாரி அறக்கட்டளை'யின் பெயர் ஹெரிடேஜ் (Heritage) ஆகும்].

''கிழக்கு இலங்கையில், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகத்தில் ரஷியாவின் கடற்படை மற்றும் விமானப்படைத் தளம் மிகப்பெரிய அளவில் அமையக்கூடிய அபாயம் உள்ளதாக அமெரிக்க பழைமைவாத கொள்கைப் பகுப்பாய்வாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வாஷிங்டனைச் சேர்ந்த ஒரு வலதுசாரி அறக்கட்டளை, 'நிர்வாக அறிக்கை' என்ற ஒரு தஸ்தாவேஜை வெளியிட்டுள்ளது. வடக்கு-கிழக்கு இலங்கையில் 'தமிழ் இனத்தின் மார்க்சிஸ்ட் அரசு' ஒன்று ஏற்படுவது அமெரிக்க நலனுக்கு உகந்தது அல்ல என்று அதில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பிராந்தியத்தில் 'மாஸ்கோ - புதுடில்லி நெருக்கம்' காரணமாக அதிகரித்துள்ள ரஷிய செல்வாக்கு, ஈழத்தில் மார்க்சிஸ்ட் அரசு ஏற்படுவதன் மூலம் மேலும் விரிவடையலாம். இது பெரும் கவலைக்குரிய விஷயமாகும் என்று அது கூறியுள்ளது.

'யாழ்குடா உள்பட வட இலங்கையின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் போராளிகள் வைத்துள்ளனர்.... நூற்றுக் கணக்கான உயிர்ப் பலிகள், ஆயிரக்கணக்கான மனித உரிமை மீறல்கள் மூலம் இதர போராளி அமைப்புக்களைத் திட்டமிட்டு ஒழித்துக்கட்டி, தங்கள் ஆதிக்கத்தை விடுதலைப் புலிகள் பெருக்கிக் கொண்டிருக்கின்றனர். ஈழத்தில் ஒரே கட்சியின் தலைமையில் சோஷலிச அரசை நிர்மாணிக்கும் தங்கள் நோக்கத்தை விடுதலைப் புலிகள் மறக்கவில்லை' என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'எங்களுடைய கோட்பாடுகள் மார்க்சிஸம் அடிப்படையின் அமைந்தவை' என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்

குழு உறுப்பினர் எல். இல்கர் கூறியுள்ளதாக அது சுட்டிக்காட்டியுள்ளது. 'ஈழம் அமைந்தால், அங்கு ஜனநாயக அமைப்பு இருக்காது' என்று 1986-ம் ஆண்டு அந்த அமைப்பின் தலைவர் ஒருவர் கூறியுள்ளதையும் அது நினைவுபடுத்தியுள்ளது.

**'தமிழகத்தில் பயிற்சி தளங்கள்'**

'பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் (பி. எல். ஓ.), லிபியா, ஜிம்பாப்வே, வடகொரியா ஆகியவற்றிடம் தமிழ்ப் போராளிகள் பயிற்சி பெறுகின்றனர். தமிழகத்தில் அவர்களுக்கு முக்கியமான சப்ளை மற்றும் பயிற்சி தளங்கள் உள்ளன. ரஷிய ஆயுதங்களை வாங்குவதற்கான நிதி, போதைப் பொருள் கடத்தல் மூலம் அவர்களுக்குக் கிடைக்கிறது' என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் 'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட' அரசாங்கம் மேலை நாடுகளுடன் நெருங்கிய உறவு வைத்துள்ளபோதிலும், ஜனநாயகம் மற்றும் சுதந்திர தொழில் முயற்சி கொள்கைகளை ஆதரித்தாலும், அமெரிக்காவின் ஆதரவைப் பெறுவதில் அது பெரும் சிரமப்பட வேண்டியுள்ளது என்று அந்த அறக்கட்டளை கூறியுள்ளது.

தொலைதூரத்திலுள்ள இலங்கையின் விவகாரத்தில் அமெரிக்கா அதிக அக்கறை காட்டாமலிருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம். அப்படியிருப்பின், இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு தற்போது ஏற்பட்டுள்ள அபாயம் பற்றி அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டிய தருணம் வந்துள்ளது. அமெரிக்காவின் நிரந்தர நண்பன் இலங்கை என்பதை அது மறந்துவிடக்கூடாது என்று அது குறிப்பிட்டுள்ளது.

**அமெரிக்காவுக்கு துறைமுக வசதி**

'அமெரிக்க தளம் அமைந்துள்ள டீகோ கார்ஸியாவுக்கும் சிங்கப்பூருக்கும் இடையே முக்கிய தங்குமிடமாக இலங்கை உள்ளது. அமெரிக்க கடற்படைக் கப்பல்களுக்கு தனது துறைமுக வசதிகளை அது வழக்கமாக அளித்து வருகிறது.

இந்தியாவின் கடும் எதிர்ப்பையும்மீறி கொழும்புக்கு வடக்கே அமைந்துள்ள அமெரிக்க வானொலி (வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா) அஞ்சல் நிலையத்தை விஸ்தரிக்கவும் மேம்படுத்தவும் 1984-ம் ஆண்டு அமெரிக்காவுடன் இலங்கை ஓர் ஒப்பந்தம் செய்து

கொண்டது. இது உலகிலேயே 2-வது பெரிய அமெரிக்க வானொலி நிலையமாகும் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

'தமிழ் - சிங்கள இன வன்முறைக்கு அரசியல் தீர்வுகாணும் வகையில், 'தமிழ்ப் போராளிகள் மீது இராணுவரீதியாக இலங்கை அரசு நிர்ப்பந்தம் செலுத்த அமெரிக்கா பல உதவிகளை அளிக்க வேண்டும்' என்று அது கோரியுள்ளது.

'தனது நட்புக்குரிய, ஜனநாயக நாடு ஒன்றில் மார்க்சிய சக்திகளின் 'குழிபறிப்பு வேலைகளை' ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தூதரக வழிமுறைகளில் அமெரிக்கா தெளிவுபடுத்த வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும்படி, போராளி களிடம் தனது செல்வாக்கை இந்தியா பயன்படுத்துவதற்கு அமெரிக்கா ஊக்கமளிக்க வேண்டும்' என்றும் அது வலியுறுத்தி யுள்ளது.

கொரில்லா நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில் இலங்கைப் போலிசாருக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் அது யோசனை கூறியுள்ளது.

இந்தியாவின் புகழ்பெற்ற பொருளாதார, அரசியல் சஞ்சிகை யொன்றின் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் குறிப்பிடத் தக்கது:-

> "......இந்திய இராணுவத்தின் உதவியுடன் தன் அரசுக்கு ஏற்படவிருந்த அச்சுறுத்தல்களை ஜெயவர்த்தன அடக்கவும் கூடும். இதன் பின்னணியில் நோக்கினால் ஜெயவர்த்தன அரசின் நீண்டகால நண்பரான அமெரிக்க அரசு ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளதையும் கவனிக்க வேண்டும். திருகோணமலைத் துறைமுகத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் எந்தவித முயற்சியையும் அது கைவிட்டுவிட்டதாகவும் கொள்ளலாம். இந்திய மேலாதிக் கத்துக்கு கட்டுப்பட்டிருந்தால்கூட ஜெயவர்த்தன அரசே தொடர்ந்து இலங்கையில் ஆட்சி செலுத்துவதை அமெரிக்க அரசு விரும்புகிறது எனலாம்." (Economic and Political Weekly, October 17-24, 1987).

புகழ்பெற்ற கலை, இலக்கிய விமர்சகரும், சமூக விஞ்ஞானியு மான ஜீ. பி. தேஷ்பாண்டே (இவர் சி. பி. எம். கட்சிக்கு மிக நெருக்கமானவர்) எழுதுகிறார்:-

> "இந்தியத் துணைக்கண்ட விவகாரங்களில் இந்தியா எடுத்த முன்முயற்சியொன்றை அமெரிக்க அதிபர் ஒருவர் பாராட் டியது இந்திய அமெரிக்க உறவுகளின் வரலாற்றில்

முன்னுரிமை இல்லாதது.'' (Economic and Political Weekly Nov. 21, 1987).

இதே கருத்தை வலியுறுத்தும் பிரபல இடதுசாரிப் பத்திரிகையாளரான நிகில் சக்கரவர்த்தி கூறுகிறார்:-

> ''ஜூலை 29 அன்று இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான 3 மணி நேரத்துக்குள் அதிபர் ரேகன் கையெழுத்திட்ட பாராட்டுச் செய்தி ராஜீவிற்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பொருள், இந்த ஒப்பந்தத்தைப் பற்றி அமெரிக்காவிற்கு முன்கூட்டியே தெரியும் என்பது மட்டுமல்ல, அமெரிக்காவின் முழு ஆதரவும் அதற்கு உள்ளது என்பதுமேயாகும். இது ஒன்றும் அப்படி அசாதாரண விஷயமல்ல. ஏனெனில் வாஷிங்டனில் உள்ள தன் நெடுங்கால எஜமானர்களை இந்த ஒப்பந்தத்தை வரைவதில் முழுவதும் கலந்தாலோசிக்காமலும் அவர்களின் முழு ஆதரவைப் பெறாமலும் இத்தகையதொரு பெரிய அயல்நாட்டுக் கொள்கை பற்றிய முடிவை ஜெயவர்த்தன எடுத்திருக்க முடியாது என்பதை அவருடைய நீண்டகால செயல்பாட்டிலிருந்து அறியலாம்......... இலங்கைக்கு இந்தியப்படை அனுப்பப்படுவதற்கும் அங்கு அவற்றை இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கும் அமெரிக்காவின் முழு ஆதரவு இருக்கிறது என்ற முடிவுக்கு வருவது நியாயமே...... அமெரிக்க அரசின் நீண்ட நாளைய நண்பர் ஜெயவர்த்தன என்பதையும், ராஜீவ் காந்தி அண்மையில் அமெரிக்க அரசுடன் பாதுகாப்புக்கான ஒத்துழைப்பு பற்றிப் பேசி வருகிறார் என்பதையும் இணைத்துப் பார்க்கவேண்டும். எனவே ராஜீவ்காந்தி தலைமையிலான இந்திய அரசு தென்னாசியப் பிராந்தியத்தில் 'பெரும் முக்கியத்துவம்' வாய்ந்த அரசாக செயல்பட வேண்டும் என்ற திட்டத்தை அமெரிக்கா வகுத்துள்ளது எனலாம்.'' (Mainstream, November 7, 1987).

உண்மைகள் இவ்வாறு இருக்க, இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள முதன்மையான பொதுவுடைமைக் கட்சிகள், இந்திய - இலங்கை ஒப்பந்தம் அமெரிக்காவிற்கு எதிரானது என்றும் இப்பிராந்தியத்தில் ஏகாதிபத்தியம் காலூன்றும் வாய்ப்பைத் தகர்த்தெறிந்துவிட்டது என்றும் கூறுகின்றன. அவர்களின் பத்திரிகைகளிற் சில விடுதலைப் புலிகளை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டுகள் என்று கூறுமளவிற்குக்கூடச்

சென்றுவிட்டன என்பது எவ்வளவு பெரிய கொடுமை! தமிழீழ விடுதலைப் புலிகளோ தமது ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றி எவ்வளவு தெளிவாகக் கூறியுள்ளனர்:

> "உலக எதேச்சதிகார அடக்குமுறைச் சக்திகளுக்கு எதிராக ஒடுக்கப்படும் மக்கள் சமூகங்களும் தேசிய இனங்களும் நிகழ்த்திவரும் சர்வதேசப் போரில் எமது தேசிய சுதந்திரப் போராட்டமும் ஒரு இணைபிரியாத அங்கமாக உள்ளது. இந்த வகையில் ஒடுக்கப்படும் உலக மக்களின் பொது எதிரியான ஏகாதிபத்தியம், காலனித்துவம், இனவாதம் ஆகிய சக்திகளுக்கு எதிராகப் போராடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உறுதிபூண்டிருக்கிறது.
>
> ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒரு புரட்சிகர சக்தி என்ற ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது உலக தேசிய விடுதலைப்போராட்டங்கள் அனைத்திற்கும் தனது பரிபூரண ஆதரவைத் தெரிவிக்கிறது. உலக விடுதலை இயக்கங்கள், முற்போக்கான நாடுகள், புரட்சிகர அரசியல் இயக்கங்கள், தொழிலாளர் ஸ்தாபனங்கள் மற்றும் சமாதானத்தை விரும்பும் சக்திகள் ஆகியனவற்றுடன் நேச உறவுகளை வளர்த்து பலப்படுத்துவதே எமது இயக்கத்தின் வெளியுறவுக் கொள்கையாகும்".

தென்னாப்பிரிக்க, பிரித்தானிய, இஸ்ரவேலின் கூலிப்படைகளையும் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட சிங்கள இனவெறிப் போராட்டத்தையும் எதிர்த்துப் போராடியதில் விடுதலைப் புலிகள் தம் கொள்கைப் பற்றை செயல்வடிவத்தில் காட்டியுள்ளனர். அமெரிக்காவையோ அல்லது வேறெந்த முதலாளியச் சக்திகளையோ அவர்கள் சார்ந்து நிற்பதாக இனியும் தொடர்ந்து இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள இடதுசாரிகள் பேசுவார்களேயானால், அதுதான் ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவான கழிசடைத்தனமான பேச்சாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா தென்னாசியாவில் தனது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முயற்சி செய்துள்ளது. அமெரிக்காவோ பிற வல்லரசுகளோ இப்பிராந்தியத்தில் செல்வாக்குத் தேடிக்கொள்வதை இவ் ஒப்பந்தம் தடுத்துவிட்டதாக இந்திய ஆட்சியாளர்களோடு சேர்ந்து கோஷ்டிகானம் இசைக்கும் இந்திய இடதுசாரிகளால், வியட்நாமிலும் நிகராகுவாவிலும் அமெரிக்கா செய்த அதே அக்கிரமங்களை இந்தியப்படைகள் ஈழமண்ணில் செய்கின்றதை எப்படிப் பார்க்க முடியும்? தனது நாட்டில் நடக்கும் மனித உரிமை விஷயங்கள்

பற்றி ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல், ICJ போன்ற உலக மனித உரிமை இயக்கங்களின் அறிக்கைகளை இனி மதிக்கப் போவதாக சோவியத் யூனியன்கூட அண்மையில் அறிவித்துள்ளது. அந்த சோசலிஷ நாட்டைப் பின்பற்றி இலங்கையில் இந்தியப்படைகள் செய்யும் அக்கிரமங்கள் பற்றிய மனித உரிமை இயங்கங்களின் அறிக்கைகளுக்கு சிறு மரியாதையையேனும் நமது நாட்டு இடதுசாரிகள் காட்டுவார்களா?

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மனப்பான்மையை இந்திய இராணுவமும்கூடப் பின்பற்றியிருக்கிறது என்பதற்கு ஒரு சில உதாரணங்களே போதுமானவை. பம்பாயிலிருந்து வெளிவரும் The Sunday Observer வார ஏட்டின் 1988 ஜுன் 14 இதழில் அமைதிப்படைக்குத் தலைமை தாங்கிய லெப்டினண்ட் ஜெனரல் திபிந்தர் சிங்கின் பேட்டி வெளிவந்துள்ளது. இந்தியாவிற்கு இராணுவரீதியாகக் கிடைத்த ஆதாயங்கள் பற்றிக் கூறுகிறார்:

> ''நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏறக்குறைய ஒரு யுத்தம் போலவே இருந்ததால், நமது துருப்புகள் சண்டையனுபவம் பெறுவதற்கு நல்ல வாய்ப்பாக இருந்தது. 1971க்குப் பிறகு இத்தகைய வாய்ப்புக் கிடைத்தது இப்போதுதான்......சிறீலங்காவில் மேற்கொண்ட நடவடிக்கைகள் தரைப்படையின் முக்கியத்துவத்தை உணர்த்தின. எந்திரமயமாக்குதல் என்பது அதிகரித்ததன் காரணமாக இராணுவத்தின் அடிப்படை அங்கமே தரைப்படைதான் என்பதை மறந்துவிடும் போக்கு நமக்கு ஏற்பட்டது. சிக்னல்கள் மூலம் உளவறிதல் என்பதிலும், அவற்றை செயலூக்கமிக்க முறையில் பயன்படுத்துவதிலும் முக்கியமான பாடங்களை சிறீலங்காவில் நாம் கற்றுக்கொண்டோம்''.

இந்தியப்படையினர் செய்த கற்பழிப்பு, கொள்ளை, கொலை பற்றிய செய்திகள் ஏராளமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. நமது நாட்டிற்கு என்றென்றும் களங்கம் ஏற்படுத்தக்கூடிய ஒரே ஒரு நிகழ்ச்சியைமட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். காமினி நவரத்ன என்ற முதுபெரும் சிங்களப் பத்திரிகையாளரை ஆசிரியராகக் கொண்டு (இப்போது) கொழும்பிலிருந்து பிரசுரிக்கப்படும் Saturday Review என்ற பத்திரிகையின் 1988 பிப்ரவரி சிறப்பிதழில் வந்துள்ள செய்தி அது.

> ''மேற்கிந்திய எழுத்தாளரான வி. எஸ். நைப்பால், எல்லா இடங்களிலும் மலங்கழிக்கின்ற ஒரு பிரமாண்டமான ஆசனவாயே இந்தியா என்று வர்ணித்ததற்காக விமர்சகர்

களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். 1988, அக்டோபர் 10-ஆம் தேதியன்று இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் நைப்பாலின் கூற்றைப்பற்றி நம்மை யோசிக்கவைக்கின்றன. புலிகள் இயக்கத்தின் பெண்கள் படைப்பிரிவின் கடுமையான எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருந்ததால் கோப்பாய் பகுதியைக் கைப்பற்றுவதற்கு இந்திய ஜவான்களுக்கு நீண்ட நேரம் பிடித்தது.

இறுதியில் அந்த ஜவான்கள், அங்குலம் அங்குலமாக முன்னேறி கோப்பாய் பகுதியைக் கைப்பற்றினர். அங்குள்ள சில வீடுகளையும் அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். வீட்டுச் சொந்தக்காரர்கள் திரும்பி வந்தபோது அலமாரிகளில் இருந்த பொருட்கள் சிதறிக் கிடைப்பதையும், வீட்டுக்குள் புகுந்திருந்தவர்கள் புடவைகள் மீதும், ஏன் கூறைப்புடவைகள் மீதும், நம்புவீர்களோ மாட்டீர்களோ, வீடுகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்த தெற்குவியல்கள் மீதும் மலங்கழித்து வைத்திருந்ததைப் பார்த்தனர்.

அதென்ன, பழிவாங்கும் நடவடிக்கையா? அல்லது கட்டுப் படுத்த முடியாத வயிற்றுப்போக்கா?

யாழ் பல்கலைக்கழகமும் போர்க்காயங்கள் பலவற்றைக் காண்பிக்கும். அவற்றில் ஒன்று, கலைவளாகம். அங்குள்ள ஒவ்வொரு படிக்கட்டும் கழிப்பறையாக மாற்றப் பட்டிருந்தது.''

இந்த உண்மைகளும் இந்திய மக்களை இதயப்பூர்வமாக நேசிக்கிற இக்கட்டுரையாசிரியர் உதயன் விரிவாக எடுத்துரைக்கிற விடயங்களும் இந்தியாவிலுள்ள இடதுசாரி, ஜனநாயக சக்திகளின் மனங்களை உறுத்துமேயானால் அதுவே இக்கட்டுரைக்குக்கிடைத்த வெற்றி என்பதில் ஐயமில்லை.

சென்னை — எஸ். வி. ராஜதுரை

16-3-1989 — ரோசா லுக்சம்பர்க் படிப்பு வட்டம்

---

பிற்குறிப்பு: உதயன், நீண்டகாலம் யாழ்ப்பாணத்தில் வசித்தவர். அண்மைக்காலங்களாக வேறொரு நாட்டில் அஞ்ஞாதவாசம் செய்து வருகிறார். அவர் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் எழுதிய கட்டுரையே 'இந்திய—இலங்கை ஒப்பந்தம்: ஓர் அமெரிக்க சதி' ஆகும்.

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்: ஓர் அமெரிக்க சதி

## அறிமுகம்

"இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் மூன்று அரசுகள் மிக நெருக்கமாக சம்பந்தப்படுகின்றன. அதில் அமெரிக்கா மறைகரமாகவும் இலங்கை இந்தியா ஆகிய இரு அரசுகளும் நேரடி இணைகரங்களாகவும் செயற்படுகின்றன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவளிப்பது என்பது அமெரிக்கா, இலங்கை, இந்தியா ஆகிய மூன்று அரசுகளினது ஒடுக்குமுறைக்கு ஆதரவளிப்பதென்பதாகும். இம் மூன்று அரசுகளினதும் கூட்டுச் செயல்தான் இவ் ஒப்பந்தம் என்பதனையும், அதன் பெயரிலான இராணுவ ஒடுக்குமுறை என்பதனையும் ஐயந்திரிபற விளக்குவதே இக்கட்டுரையின் பிரதான முயற்சியாகும். ராஜீவ் அரசாங்கத்தின் பலவீனத்தைப் பயன்படுத்தி அமெரீக்க, இலங்கை அரசுகள் இவ் ஒடுக்கு முறையை இந்தியா மூலம் நிறைவேற்றுகின்றன. "சுதந்திர இந்தியாவின் கடந்த 40 ஆண்டு கால வெளியுறவுக் கொள்கை வரலாற்றில் இழைக்கப்பட்ட மிகப் பெரிய தவறு இவ் ஒப்பந்தம்" என்று வர்ணிக்கப்படுவது சரியானதே. இவ் ஒப்பந்தம் உடனடியாக தமிழ் மக்களிற்குத் தீங்காகவும் நீண்டகாலத்தில் இந்தியாவிற்குத் தீங்காகவும் அமைகின்றது.

இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் தோற்கடிக்கப்படுவது தமிழ் மக்களுக்கு மட்டும் உரிய தோல்வியல்ல. எதிர்காலத்தில் இந்தியாவிற்கும் பெரும் தோல்வியாகும். இதனை இந்திய ஆட்சியாளர்கள் உணரவேண்டும். ராஜீவின் இந்த நடவடிக்கை, மரக்கிளையில் இருந்து கொண்டே அந்த மரக்கிளையைத் தறிப்பது போன்றதாகும்.

இவ் ஒப்பந்தத்தின் மூலமும் அதன் பின்னரும் ராஜீவ் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் இந்தியா அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் இலங்கை மண்ணில் தோல்வி கண்டுள்ளது. ராஜீவ் அரசாங்கம் என்றுமே அழியாத கறையை இந்தியாவிற்கு ஏற்படுத்தியுள்ளது.

ராஜீவ் அரசாங்கம் தொடர்ந்தும் கறைபடிந்த ஒடுக்குமுறைகளைச் செய்வதன் மூலம் இறுதியாகச் சாதிக்கப்போவது ஏதுமில்லை. வேண்டுமென்றால் ஒரு இரத்தக்களரியை ஏற்படுத்தி அதில் ஒரு குறுங் காலத் திருப்தியை அனுபவிக்கலாம். ஆனால் வரலாற்றுப் போக்கின்படி இது நீடிக்கப் போவதில்லை.

இரத்தம் தோய்ந்த நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மக்களிடமிருந்து முழுக்க முழுக்க இந்தியா அந்நியப்படாமல் தமிழ் மக்களை நண்பர்களாக்க முயல வேண்டும். ராஜீவ் அரசாங்கம் எந்தளவு விட்டுக் கொடுப்புக்களை சிங்கள அரசிற்குச் செய்தாலும் அது நிரந்தர இந்திய எதிர்ப்பு அரசாகவே இருக்கும். எனவே உடனடியாக ராஜீவ் அரசாங்கம் ஒடுக்குமுறையை நிறுத்த வேண்டும். அடுத்து விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும். இக் கருத்துக்களை விளக்க முற்படுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## இந்திய - அமெரிக்க உறவும் ராஜீவும்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில், அமெரிக்காவினது நிலைப்பாட்டினையும், அதன் இராஜதந்திரங்களையும், ஜே.ஆரின் நிலைப்பாட்டினையும், அவரது ராஜதந்திரத்தையும் நாம் மிக ஆழமாக ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும். இவ்விரு தரப்பினரதும் நிலைப்பாடுகளை நாம் சரிவரப் புரிந்து கொள்ளாவிடில் இனப் பிரச்சினையின் பரிமாணத்தையும் இதன் எதிர்காலத்தையும் நாம் புரிந்து கொள்ள முடியாது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இவ்வொப்பந்தம் அதன் இன்னுமோர் காம்ப் டேவிட் (Camp David) ஒப்பந்தமாகும். ஜே.ஆரைப் பொறுத்தவரையில் ஒரு புதிய கோலிஸ்ட் (Gaullist) நடவடிக்கையாகும்.

ஜே. ஆர்-ராஜீவ் ஒப்பந்தத்தின் மூலம் இந்திய - அமெரிக்க உறவு வலுவடையத் தொடங்கியுள்ளது. இவ் ஒப்பந்தம் அமெரிக்காவின் அரசியல், பொருளாதார நலனிற்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும். இவ் ஒப்பந்தத்தின் மூலம் குறுங்கால நோக்கிலும் சரி, நீண்டகால நோக்கிலும் சரி அமெரிக்கா வெற்றியீட்டியுள்ளது. ராஜீவ் அரசாங்கத்தை ஏமாற்றி மிக அழகாக அமெரிக்கா, இந்தியாவை இலங்கையில் சிக்கவைத்துவிட்டது. தனது அரசியல் வாழ்வில் ஜே. ஆர். வெல்கிறாரோ அல்லது தோற்கிறாரோ என்பது வேறு. ஆனால் இவ் ஒப்பந்தத்தின் மூலம் ராஜீவ் அரசாங்கத்தையும் இந்தியாவையும் அவர் எல்லா வழிகளிலும் தோற்கடித்துள்ளார் என்பது மட்டும் உண்மை. அமெரிக்காவும் ஜே. ஆரும் சேர்ந்து ராஜீவ் அரசாங்கத்தை ஏமாற்றி விட்டனர். இதில் ஏமாற்றப்பட்டுள்ளவர் ராஜீவ். ஆனால் இரையாக்கப்பட்டுள்ளவர்கள் முதலில் தமிழீழ மக்களாவர்.

இந்தியா சம்பந்தமான தனது நோக்குநிலையை அமெரிக்கா தற்போது மாற்றியமைத்துள்ளதாகவும் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென அமெரிக்கா விரும்புவதாகவும் கூறிய ராஜீவ் இம் மாற்றத்திற்கு ஆதாரமாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா ஆதரவளிப்பதை எடுத்துக் காட்டினார். அமெரிக்கா இப்போது தன் பார்வையை மாற்றிக்கொண்டு தென்னாசியப் பிராந்தியத்தில் முன்னைவிடப் பெரிய பாத்திரத்தை வகிக்கவேண்டுமென விரும்புகிறது. அவரது (ராஜீவின்) உறுதிப்பாட்டுக்கு ஆதரவாக அமெரிக்கா இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்கிறது.

> "The U.S. had now changed it's perception and wanted India to play a bigger role in the region (South Asia) The U.S. is backing Indo-Lanka Agreement in support of his (Rajiv) Assertion. (TH/28-10-1987)

எனவே இலங்கை இந்திய ஒப்பந்தம் இந்திய அமெரிக்கா உறவில் ஒரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதை நாம் அவதானிக்கத் தவறக்கூடாது. ஆகவே இவ் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தினை நாம் உரிய வகையில் புரிந்துகொள்வதுடன், இதற்குப் பின்னால் ஒளிந்துகிடக்கும் சதிகாரத்தனங்களையும் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். இவற்றினை விளங்குவதற்கு முதலில் அமெரிக்க - இந்திய உறவினையும் அதில் ஒப்பந்தம் வகித்த பங்கினையும், ஒப்பந்தத்தில் இரு அரசுகளின் நிலைப்பாட்டினையும் அதிற் பொதிந்துள்ள சதிகாரத்தனங்களையும் விளங்க முற்படுவோம்.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா மிகப் பெரிய நாடாகும். இது பெரும் மூலவளங்களையும், சந்தைவாய்ப்பையும் கொண்ட ஒரு நாடாகும். எனவே முதலாம் உலக நாடுகளின் அக்கறை இந்தியாவைத் தத்தமது பக்கம் இழுப்பதிலேயே இருக்கும். இந்திராகாந்தி அரசாங்கம் இருந்த காலத்தில் இதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன. அமெரிக்கா இந்தியாவின் அண்டை நாடுகளில் தனது கால்களை ஆழப்பதித்து அதன் மூலம் இந்தியாவிற்குத் தொல்லை கொடுத்தும் வந்தது. இத்தொல்லைகளின் மூலம் இந்தியாவுடன் பேரம்பேசி சில நலன்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை அமெரிக்கா பெற்றுவந்தது. ஆயினும் அமெரிக்காவால் நினைத்தளவு நலன்களைப் பெறமுடியவில்லை.

ராஜீவ் அரசாங்கத்தில் இந்நிலைமைகள் சற்று மாறத் தொடங்கின. ராஜீவ், அடிப்படையில் அமெரிக்க சார்பானவர். இவரது அரசாங்கத்தில் அமெரிக்காவின் நலன்களிற்கான வாய்ப்புகள் இந்தியாவில் உருவாகத் தொடங்கின. தொழில் நுட்பம், கூட்டு உற்பத்தி, முதலீடு, வர்த்தகம் என்பன சம்பந்தமாக ராஜீவ் அமெரிக்காவிற்குப் பச்சை விளக்குக் காட்டினார். இராணுவ ரீதியான கதவுகள் தான் இந்தியாவில் அமெரிக்காவிற்கு திறக்கப்படாமல் இருக்கக்கூடிய தோற்றப்பாடுகள் ஆரம்பத்தில் காணப்பட்டன. ஆனால் 1986 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கஸ்பர் வெயின்பேகர் (Caspier Wainberger) என்ற அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளரின் டெல்லி விஜயத்தின்போது இராணுவரீதியான கதவுகளும் திறக்கப்படுவதற்குரிய அறிகுறிகள் தோன்றின. ஆயினும் ராஜீவ் நினைத்த மாத்திரத்தில் உறவை வளர்க்க முடியவில்லை. அதற்கான தடைக்காரணிகள் பிரதான மாக அமெரிக்கா பக்கமே இருந்தன.

குறிப்பாக பாகிஸ்தான், இலங்கை சம்பந்தமாக அமெரிக்கா கடைப்பிடித்து வந்த கொள்கையே அமெரிக்க - இந்திய உறவு

வளர்ச்சியடைவதற்கு பெரிதும் தடையாக இருந்தது. பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் பிரதானமாக இரு முக்கிய விடயங்கள் காணப்பட்டன. ஒன்று, பாகிஸ்தானின் அணுவாயுதத் தயாரிப்பிற்கான முயற்சிக்கு அமெரிக்கா உதவி செய்யக்கூடாது என்பதுடன் அதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பது; இரண்டாவது, பாகிஸ்தானிற்கு அமெரிக்கா (AWACS)* யுத்த விமானம் வழங்கக்கூடாதென்பது. இலங்கையைப் பொறுத்த வரையில் இராணுவ, கேந்திர ரீதியிலான நலன்களைப் பெறும் நோக்குடன் இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா நடந்து கொள்ளக் கூடாதென்பதாகும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் அமெரிக்கா மென்போக்கைக் கடைப்பிடிக்கும் நிலையில் இந்தியாவில் அதிக இலாபங்களை ஈட்டக்கூடிய வாய்ப்பினை ராஜீவ் அரசாங்கம் ஏற்படுத்தத் தயாராக விருந்தது. இதனால் இவ் இரு நாடுகள் சம்பந்தமான விடயங்களில் தனது போக்கில் சில மூலோபாயரீதியான மாற்றங்களையும் செய்ய அமெரிக்கா தயாரானது. அதன் முக்கிய அம்சமாக இலங்கைப் பிரச்சினை காணப்படுகின்றது. வரலாற்றனுபவத்திலிருந்து படிப்பினைகளைக் கற்று காலத்திற்கேற்பத் தனது அணுகுமுறைகளை அமெரிக்கா மாற்றிக் கொள்வது இயல்பு.

உலக நாடுகளில் ஏதோ ஒருவகையில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதன் மூலம் தனக்குத் தேவையான பொருளாதார நலனைப் பெறுவதுதான் அமெரிக்காவின் பிரதான சர்வதேச அரசியலாகும். இவ் ஆதிக்கத்தினை நிலைநாட்டுவதற்கான தனது வடிவத்தினை இது காலத்திற் கேற்பவும் நிலைமைக் கேற்பவும் மாற்றிக்கொள்ளும். உதாரணமாக ஈரானில் தனக் கேற்பட்ட தோல்வியில் இருந்து அமெரிக்கா பெரும் படிப்பினையைப் பெற்று அதன் பின்பு தனது ஆதிக்கமுறையில் சில மாற்றங்களை செய்துகொண்டது. அதாவது ஈரானிய மன்னர் ஷாவிற்கு நேரடியாக உறுதுணையாக நின்று அங்கு ஒரு முடியரசு எதேச்சதிகார இராணுவ ஆட்சியை அமெரிக்கா நடாத்தியது. இறுதிவரை ஷாவை ஆட்சியில் வைத்திருப்பதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து இறுதியாக ஒரு இரத்த வெள்ளத்தைக்கூட அங்கு ஓடவிட்டது. ஆனால் அங்கு ஏற்பட்ட புரட்சியின் மூலம் மன்னன் ஷா மட்டுமன்றி அமெரிக்காவும் விழ நேர்ந்தது. இதன் பின்பு பிலிப்பைன்சில் அமெரிக்கா தனது முறைமையை மாற்றிக்கொண்டது. அதாவது ஈரானின் மன்னன்

---

* AWACS: Air Borne warning and control system

ஷாவிற்கு நேரடியாக துணை நின்றது போலவே பிலிப்பைன்சிலும் ஜனாதிபதி மார்க்கோஸின் எதேச்சதிகாரத்திற்குத் துணையாக நின்று அங்கு இரத்தக்களரியையும் ஏற்படுத்தி வந்தது.

ஈரானைப்போலவே பிலிப்பைன்சிலும் இதற்கெதிரான புரட்சிகள் தோன்றவே அமெரிக்கா மார்க்கோஸைக் கைவிட்டு வளர்ந்துவந்த எதிர்க்கட்சிப்பக்கம் சார்ந்து திருமதி அக்கி யூனோவை ஆதரித்ததன் மூலம் அங்கு தனது நிலையை உறுதிப் படுத்திக் கொண்டது. இவ்வாறுதான் தென்கொரியாவிலும் அமெரிக்காவின் நடவடிக்கை இருந்தது. இந்த வகைகளில் தனது தந்திரோபாயத்தினை மாற்றியமைப்பதன் மூலம் ஈரானில் அமெரிக்கா தூக்கியெறியப்பட்டது போல இவ்விரு நாடுகளிலும் தூக்கியெறியப்படவில்லை. எனவே அனுபவத்திற்கேற்ப தனது நடைமுறைகளை அமெரிக்கா மெருகுபடுத்திக் கொள்வதைக் காண முடிகின்றது.

இங்கு காம்ப் டேவிட் உடன்படிக்கையின் அனுபவத்தை இலங்கை - இந்திய அரசுகளின் விவகாரத்தில் அமெரிக்கா பெருமளவு பிரயோகித்திருக்கின்றது என்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது எகிப்தும் இஸ்ரேலும் ஒன்றுக் கொன்று எதிரான பகைமையுள்ள நாடுகள். அதில் அமெரிக்கா இஸ்ரேல் பக்கம் நின்றது. எகிப்து பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் பக்கம் நின்று அரபு நாடுகளின் மத்தியில் ஒரு முற்போக்கான பாத்திரத்தை வகித்து வந்தது. ஆனால் இஸ்ரே லுக்கும் எகிப்திற்கும் இடையே ஒரு கபடத்தனமான, சிறுவிட்டுக் கொடுப்புகளுடனான பொய்யான ஓர் ஒப்பந்தத்தை செய்வதன் மூலம் எகிப்தை தனது பக்கம் கொண்டுவருவதற்கான சூழ்நிலை அன்வர் சதாத்தின் ஆட்சியின்கீழ் இருப்பதை அமெரிக்கா உணர்ந்திருந்தது. இந்நிலையிலேயே 1979-ம் ஆண்டு அமெரிக்கா எகிப்தையும் இஸ்ரேலையும் உடன்பாட்டிற்குக் கொண்டுவந்தது. இதன் மூலம் காம்ப் டேவிட் உடன்படிக்கை கைச்சாத்தானது. இவ் ஒப்பந்தத்தின் மூலம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திலிருந்து எகிப்து தன்னை விலக்கிக் கொண்டதுடன் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்குப் பெரும் துரோகத்தையும் இழைத்தது. அரபு உலகில் தனக்கிருந்த முற்போக்கு நிலையையும் இழந்து இறுதியில் அமெரிக்கா பக்கம் திரும்பியதால் இன்று அமெரிக்காவின் கரம் எகிப்திலும் இஸ்ரே லிலும் ஆழப்பதிந்துள்ளது. இவ் அனுபவத்தை அமெரிக்கா இலங்கை - இந்தியப் பிரச்சினையில் ஏதோ ஒரு வகையில் பிரயோகித்துள்ளதென்றே கூறவேண்டும். முழுக்க முழுக்க இலங்கையின் பக்கம் நிற்பதால், இந்தியாவில் தனது

நலன்களுக்கு முழுக்குப் போடாமல், அதே வேளை இலங்கையையும் முற்றுமுழுதாகக் கைவிடாமல் இரு நாடுகளிலும் தன் து நலன்களை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் இவ்வாறான ஓர் ஒப்பந்தத்தின் பொருட்டு மறைமுகமாக நின்று இயக்குவது அமெரிக்காவிற்கு அவசியமாய் இருந்துள்ளது. அதேவேளையில் நல்லபிள்ளையாகத் தன்னைக் காட்டிக்கொண்டு இந்தியாவைச் சிக்கலுக்குள் அகப்பட வைக்கக்கூடிய வகையிலும் இவ் ஒப்பந்தத்தின் அமைப்புகளை உருவாக்குவதில் அமெரிக்கா பங்களித்துள்ளது. அந்த வகையில் பார்க்கும்போது இவ் ஒப்பந்தம் காம்ப் டேவிட் உடன்படிக்கையைவிட மேலும் சில முன்னேற்றகரமான அம்சங்களை அமெரிக்காவிற்குக் கொடுத்துள்ளது. ஒரு வகையில் இது அமெரிக்காவின் இன்னுமோர் காம்ப் டேவிட் ஒப்பந்தம் எனலாம்.

இவ் ஒப்பந்தத்தை ஒட்டிய அமெரிக்காவின் நடவடிக்கைகளையும் அதன் பின்பான அமெரிக்க - இந்திய உறவுப் போக்கினையும் ஆராய்வதன் மூலம் இதுபற்றிய உண்மை நிலையினை மிகத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். இந்தியா பக்கம் அமெரிக்கா சில விட்டுக்கொடுப்புகளைச் செய்து ராஜீவ் அரசாங்கத்தின் நம்பிக்கையினைப் பெற்றுத் தனது உறவை வலுப்படுத்தத் தொடங்கியது. இலங்கை விவகாரம் பற்றிய போக்கில் அமெரிக்கா சில மாற்றங்களைச் செய்யத் தொடங்கியது.

இராணுவ ரீதியான மோதல்களைவிட இராஜதந்திர ரீதியானதும் பொருளாதார ரீதியானதுமான போட்டி நடவடிக்கைகள் ஆசிய விவகாரங்களில் முக்கியம் பெறத் தொடங்கியுள்ளன என்ற கருத்து அமெரிக்க இராஜதந்திர ஆலோசகர் மத்தியில் உருப்பெற்று வருவதை அவதானிக்கலாம். [NW 19-9-88-PP 23-27] இந்த வகையில் இலங்கை விவகாரத்தில் ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் இந்தியாவை வீழ்த்தி சிக்கலுக்குள்ளாக்கவும், அதே வேளை இந்தியாவின் நட்பைத்தான் பெற்றுக்கொள்ளவும் ஏதுவான ஓர் இராஜதந்திரரீதியான நடவடிக்கையாகவே இவ் ஒப்பந்த விவகாரத்தில் அமெரிக்கா செயற்பட்டுள்ளது. இவ்வாறு ஓர் ஒப்பந்தத்திற்குப் போகுமாறு ராஜீவ் அரசாங்கத்தை அமெரிக்கா தூண்டியுள்ளதெனத் தெரிகிறது. குறிப்பாக இலங்கையில் ஓர் இராணுவ சதிப் புரட்சி நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அவ்வாறு இராணுவ சதியாளர் ஆட்சியைக் கைப்பற்றினால் அவர்கள் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வாக தமிழின அழிப்பையே கைக்கொள்வர் என்றும் அதற்கு முன்பே ஜே. ஆர். அரசாங்கத்துடன் ஒரு தீர்வுக்கு போகுமாறும் அமெரிக்கா ராஜீவைத் தூண்டியுள்ளது எனத்

தெரிகிறது [TF 100-P-82]. இதன் மூலம் இலங்கை விவகாரத்தில் இந்தியாவை இந்தியாவின் திட்டத்தின்படி செயல்படவிடாமல் அமெரிக்கா தனது திட்டத்தின்படியும் "ஜே. ஆர்." விதிக்கும் வரையறைப்படியும் செயல்படக்கூடிய நிலையை அமெரிக்கா தோற்றுவித்தது எனலாம். எனவேதான் ஒப்பந்தம் கைச்சாத்தாகி 6 மணிநேரத்திற்குள் அமெரிக்கா தனது நல்வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்ததையும் அதே வேளை இந்தியாவின் நீண்டகால நண்பராகிய சோவியத் யூனியன் 48 மணி நேரத்துக்குப் பின்புதான் வாழ்த்துச் செய்தி அனுப்பி வைத்ததையும் நாம் அவதானிக்கவேண்டும். அமெரிக்காவின் இச்செயல் பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. [TF 100-P-82].

மேலும், தென்னாசியா பற்றியோ அன்றி இந்திய - இலங்கை அரசுகள் பற்றியோ குறிப்பிடப்படும் அமெரிக்க அரசின் உத்தியோகபூர்வக் குறிப்புகளில் எல்லாம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை வரவேற்கும், பாராட்டும் குறிப்புகள் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பதைக் காணலாம். அத்துடன் அமெரிக்க காங்கிரஸ் உபதலைவர், ஜே. ஆர்., ராஜீவ் ஆகிய இருவர்களினது பெயர்களை "நோபல்" சமாதானப் பரிசிற்காக பரிந்துரைத்திருந்தார் என்பதும் நோக்கற்பாலது. [TF/16-10-88]

இந்தியாவுடனான அமெரிக்காவின் கடந்தகால உறவுபற்றிய போக்கிலிருந்து வழக்கத்திற்கு மாறான வகையில் இந்த ஒப்பந்தம் சம்பந்தமான நடத்தைகள் அமைந்துள்ளன. இந்த வழக்கத்திற்கு மாறான நடத்தைக்கான விளக்கத்தை நாம் தேடவேண்டும். இதனை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கு ஒப்பந்தம் பற்றிய அமெரிக்கர்களின் கருத்துக்களை நாம் அவதானிக்க வேண்டியது அவசியம்.

இவ் ஒப்பந்தம் பற்றி அமெரிக்க வெளிநாட்டுச் செயலாளர் ஜோர்ஜ் சூல்ட்ஸ் [George Shultz] பின்வருமாறு கூறினார்: "தனித்துவம் வாய்ந்த சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு புதுவிதமான [சிறந்த] நடவடிக்கை" [TF/100-P-82].

மேலும், இதுபற்றி அமெரிக்க இராஜாங்க பேச்சாளர் சார்லஸ் ரெட்மன் [Charles Redman] குறிப்பிட்ட கருத்தினை நோக்குவோம். "இந்த ஒப்பந்தத்தை உருவாக்குவதில் துணிச்சல் மிக்க இரு தலைவர்களினதும் அரசியல் விவேகம் மிக்க முயற்சிகளையும் விடாமுயற்சிகளையும் நாம் பாராட்டுகின்றோம்."

"We applaud the Statesman - like efforts and perseverance of these courageous Leaders in achieving this Accord". [TIMES / 10 - 08 - 1987, P - 7]

இவ் ஒப்பந்தத்தை றீகன் அங்கீகரித்ததாகக் கூறப்படும் பகுதியை நோக்குவோம். "இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்குவதில் கைச்சாத்திட்ட ராஜீவ் காந்தியினதும், ஜே. ஆரினதும் அரசியல் விவேகத்தையும், துணிச்சலையும் றீகன் பாராட்டினார்".

"Mr Reagan praised the Statesmanship and courage shown by Mr. Gandhi and the Sri Lankan President Mr. Jeyawardana in signing the Agreement to end the Ethnic Conflict. [TH / 21 - 10 - 1987]

இவ் ஒப்பந்தம் பற்றி அமெரிக்கப் பேராசிரியர் ஹவாட் றிக்கின்ஸ் (Howard Wriggins) என்பவர் (இவர் இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவரும் சுதந்திரத்தின் பின்னான இலங்கை பற்றிய ஒரு விரிவான நூலை எழுதியவரும் இலங்கை பற்றிய விவகாரங்களில் அமெரிக்க அரசிற்கு ஆலோசனைகளை எடுத்துக்கூறி வருபவருமாவார்) கூறிய கருத்து கூர்ந்து கவனிக்கப் படவேண்டியதுமாகும்: "பிரச்சினையின் ஒரு தரப்பாக இந்தியா இருந்த நிலையில் இருந்து அதனை அப்பிரச்சினையின் தீர்வின் ஒரு தரப்பாக மாற்றிய நிலைமைக்காக ஜே. ஆர். பாராட்டுக்குரியவர்" [TF 100-P] என்பதாகும். இந்தியா இது வரை காலம் இருந்து வந்த நிலையில் இருந்து ஒரு எதிர்நிலைப் பாத்திரமாக மாற்றப்பட்டு சிக்கலுக்குள் வீழ்த்தப்பட்டுள்ளதை யும் அதற்காக ஜே.ஆர். அவரது எஜமானிய அரச இயந்திரத்தவர் களால் வெளிப்படையாகவே பாராட்டப்படுவதையும் இங்கு அதன் உண்மையான அர்த்தத்தில் புரிந்துகொள்ள வேண்டும்.

"அவர் எனது எதிரியாயிருந்தால் அவரது கரத்தை விலக விடாது இறுகப்பற்றி பிடித்துக் கொள்வதன் மூலம் அவரை நான் என்னுடன் வைத்திருப்பேன் [TF-100-P-71] என இந்தியாபற்றி London Times பத்திரிகைக்கு அக்டோபர் 1987-இல் அளித்த பேட்டியின்போது ஜே. ஆர். கூறி இருந்ததை இங்கு நாம் மனத்தில் கொள்வது பொருத்தமானது.

இந்தியாவுக்கு எதிரான அமெரிக்காவின் சதிகாரத்தனம் இவ்வாறிருக்கும்போது அமெரிக்காபற்றிய ராஜீவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்குமென்பதை சற்று நோக்குவோம்.

நிக்சனைப் பார்த்து ராஜீவ் கூறியதாவது:

"பொதுவாக இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் அளித்து வரும் ஆதரவை, குறிப்பாக இதன் பொருட்டு இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் ஜூலை 29-ந் திகதி நான் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை நீங்கள் ஆதரிப்பதை நாம் பெரிதும் வரவேற்கின்றோம்".

"We Appreciate support to effort to end the ethnic conflict in Sri Lanka; Mr. Reagan, in Particular to the July 29th Agreement which I Signed with the SriLankan President J. R. Jeyawardana" *(TH/21/10/1987)*,

மேலும் நிக்சனைச் சந்தித்தபின் ராஜீவ் இந்தியா திரும்பியதும் இந்திய - அமெரிக்க உறவு பற்றி ராஜீவ் கூறிய கருத்து பின்வருமாறு உள்ளது.

"தொழில்நுட்ப அபிவிருத்தித் துறையில் இந்தியாவை அமெரிக்கா வெறும் சந்தையாக அல்லாமல் ஒரு பங்காளியாகவே கருதி நடக்கவேண்டும் என நான் எதிர்பார்க்கின்றேன். இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம், முதலீடு ஆகிய துறைகளில் இன்று காணப்படும் நிலையைவிட மேலும் அதிக செயற்பாடுகளை விஸ்தரிக்க வேண்டுமென நாம் (ராஜீவும், றீகனும்) இணங்கியுள்ளோம்.

"I hope that the US would Recognize India not just as a Market but as a Partner in technological Progress: in the field of bilateral trade and investment, We (Ragiv and Reagan) have agreed that much can be done to expand the Present Level of activity" *(TH/21/10/1987)*.

அத்துடன் ராஜீவின் 1987 அக்டோபர் அமெரிக்க விஜயத்தின் போது அமெரிக்காவிடமிருந்து ஆயுதக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து பேசப்பட்டதையும், (LG/15/11/1987-P-6) பின்பு 1987 நவம்பரில் இந்திய விமானப்படைத் தளபதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்ததனையும் இங்கு நாம் நோக்க வேண்டும். எனவே இராணுவத்துறை சார்ந்த உறவின வளர்ச்சிப் போக்கும் படிப்படியாக இங்கு ஏற்பட்டு வருவது தெளிவாகிறது.

பொதுவாக அமெரிக்காவும் ஏனைய அதன் நட்பு நாடுகளும் சார்ந்த போக்கினை இன்று இந்தியா அதிகம் கடைப்பிடிப்பதாக அறிஞர்களால் கருதப்படுகிறது. உதாரணமாக தீபக் திருபாதி (Deepak Tripathi) என்பவரின் கருத்தினை நோக்குவோம்,

"அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் போன்ற நாடுகளை 'முதலீடு, 'தொழில்நுட்பம்' ஆகிய துறை சார்ந்து தன்பால் 'இந்தியா' கவர்ந்திழுக்கத் தொடங்கிவிட்டது. இதில் கணிசமான அளவு வளர்ச்சியும் காணப்படுகிறது." (WT/July/88/PP 144)

மேலும் இராணுவ ரீதியானதும், கைத்தொழில் ரீதியானதுமான அதிக முக்கியத்துவம் வாய்ந்த உடன்பாடுகள் சுவீடன், மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளன. (மேற்கூறிய நூல் PP 113 - 114)

இவை தவிர 1988 ஏப்ரலில் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் பிராங்க் காலுச்சி (Frank Calucci)யின் டெல்லி விஜயம் மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. 1962-இல் சீன - இந்திய யுத்தத்தின் பின் இராணுவ, தொழில்நுட்ப ரீதியான உறவு வீழ்ச்சி அடைந்தது. நீண்ட காலத்திற்குப் பின் இவ் உறவில் முக்கிய மாற்றம் ஏற்படுவதற்கான போக்கினை காலுச்சியின் விஜயம் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கு அமெரிக்கா இராணுவ தொழில் நுட்பத்தை விநியோகிப்பதற்கான உடன்பாடு ஏற்பட்டுள்ளது. (THIE/16/04/1988)

காலுச்சியின் டெல்லி விஜயம் இந்திய - சோவியத் உறவில் குறிப்பாக பாதுகாப்புத்துறை சம்பந்தமான விடயங்களில் ஒரு இடைவெளியை ஏற்படுத்தக் கூடுமெனக் கருதப்படுகின்றது. (THIE/16/04/88). இராணுவ தொழில் நுட்பம் சார்ந்த உடன்பாடானது உண்மையில் ஆயுதங்களுக்கு இந்தியா மாஸ்கோவைச் சார்ந்து நிற்றலைக் குறைப்பதற்கான வாஷிங்டனின் ஒரு நடவடிக்கையாகவே கொள்ளப்படுகிறது. (TH/13/04/88)

சோவியத்யூனியன் இந்தியாவுடனான தனது உறவைப்பேண அதற்கான சில மாற்று வழிகளைக் கையாளக் கூடுமென திருபாதி கருதுகிறார். ஆனால் ஒரு விடயம் இங்கு தெளிவு. அதாவது ஒப்பந்தத்தின் பின்பு அமெரிக்க - இந்திய உறவு மிக வேகமாக வளர்ச்சி அடைகிறது என்பதுதான். எனவே இந்திய - அமெரிக்க உறவு வளர்ச்சி அடைவதற்கு இவ் ஒப்பந்தம் முக்கிய திருப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

எனவே இலங்கைப் பிரச்சனையில் ஒரு நெகிழ்ச்சித் தன்மையைக் கடைப்பிடித்து இவ் ஒப்பந்தத்துக்கு வழி சமைத்துவிட்டு இந்தியாவுடன் தனது உறவை அமெரிக்கா அதிகம் வலுப்படுத்தியுள்ளது. குறிப்பாக தனது ஆயுத விற்பனைக்கான சந்தை

யாகவும் இன்று இந்தியாவைத் தன்பால் கவர்ந்துள்ளது. காம்ப் டேவிட் உடன்படிக்கை மூலம் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்த எகிப்தையும் இஸ்ரேலையும் ஒரே நேரத்தில் தனது நட்பு நாடுகளாக்கியதுபோல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குத் துணை நிற்பதன்மூலம் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளையுமே தனது நட்புநாடுகளாக அமெரிக்கா ஆக்கிக்கொண்டுள்ளது.

காம்ப் டேவிட் உடன்படிக்கை மூலம் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு எகிப்து துரோகம் இழைத்தது போலவே இந்தியாவும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தது. எகிப்தின் அந்த நடவடிக்கையால் சர்வதேசரீதியில் அது தனது செல்வாக்கைக் குறைத்துக்கொண்டதுடன் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தின் மரணத்திற்கும் அது காலாக அமைந்தது. மேலும் காம்ப் டேவிட் ஒப்பந்தம் இஸ்ரவேலை எல்லா வகையிலும் உறுதிப்படுத்துவதாகவே அமைந்தது. 1967 நடந்த யுத்தத்தில் இஸ்ரவேலிடம் எகிப்து தான் இழந்த பாலைவனமான 'சினாய்' பிரதேசத்தை இவ் ஒப்பந்தத்தின் மூலம் மீளப் பெற்றுக் கொண்டது. ஆனால் இஸ்ரவேலுக்கு அரசியல், இராணுவ ரீதியாக அவ் ஒப்பந்தம் வெற்றியையே பெற்றுக் கொடுத்தது. அவ் ஒப்பந்தத்தின் மூலம் இலாபமடைந்தது அமெரிக்காவும், இஸ்ரவேலும்தான். ஒப்பந்தம் அப்படியே அமுல்படுத்தப் படுமானால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலும் இலாபமடைவது அமெரிக்காவும், இலங்கை அரசும்தான். இவ் ஒப்பந்தத்தினால் இந்திய அரசு எகிப்தைவிடப் பெரிதும் நட்டமடையவுள்ளது. ஆனாலும் இங்கு ஒரு முக்கிய வேறுபாட்டை நாம் கவனிக்க வேண்டும். பாலஸ்தீனியர்கள் தோற்கடிக்கப்பட்டிருந்த நிலையில் தான் எகிப்து, காம்ப் டேவிட் உடன்படிக்கைக்குப் போயிருந்தது. ஆனால் இங்கு இந்தியா எக்காலத்திலும் தனக்கு உறுதுணையாக நிற்கவல்ல தமிழ் மக்களின் போராட்டத்தைத் தோற்கடிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் இத் தீவில் பலவீனப்படுத்தப்பட்டு தமது முக்கியத்துவத்தை இழக்கும் நிலை ஏற்பட்டால் பின்பு சிங்கள ஆட்சியாளர்கள் சுதந்திரமாகவே இந்திய எதிர்ப்பைக் கைக்கொள்ள முடியும். இவ் ஒப்பந்தத்தை ஏற்று அவ்வாறே அமுல்படுத்தப்படுமானால் தமிழரின் தேசிய இனத் தன்மை திரவநிலையை அடைந்துவிடும். அக்கட்டத்தில் இலங்கையின் வடக்கு, கிழக்கு உட்பட்ட முழுத் தீவிலும் சிங்கள ஆதிக்கம் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் ஏற்படலாம். அப்போது முழுத்தீவும் இந்திய எதிர்ப்புத் தன்மையுள்ள பூமியாகவே இருக்கும்.

இன்று இருப்பது போன்ற உலக உறவு நாளையும் இருக்கப் போவதில்லை. அவை மாறிக்கொண்டே இருக்கின்றன. எவ்வளவு தான் தொழில் நுட்பங்கள் வளர்ச்சி அடைந்தாலென்ன, அண்ட வெளி யுத்த முறைகள் (SDI) வந்தாலென்ன, தரை தன் முக்கியத்துவத்தை இழக்கப்போவதில்லை. இராணுவக்கேந்திர முக்கியத்துவம் பெருமளவு குறையப்போவதில்லை. 'ஐம்பதடி உயரத்தில் கம்பத்தில் நின்று சாகஸம் புரிந்தாலும் 50 காசு வாங்க கீழிறங்கியே வரவேண்டும்' என்பதுபோல எவ்வளவுதான் வானளாவிய தொழில் நுட்பங்கள் அதிகரித்தாலும் அவை பூமியில் இறங்கித்தான் தமது நலன்களை உறுதிப்படுத்த வேண்டும். எனவே பூமியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அதிக அளவில் தமது முக்கியத்துவத்தினை இழக்கப் போவதில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் தமிழ் இனத்தை அழிவுப் பாதையில் இட்டுச் செல்ல இந்தியா உதவுவதன் மூலம் ஒரு காலத்தில் முழுத்தீவையுமே தனது நிரந்தர எதிரியாக இந்திய அரசு எதிர்கொள்ளவேண்டி ஏற்படும். எனவே தமிழ் மக்களுக்கு ஏற்படும் அழிவானது இந்தியாவுக்கும் ஏற்படுத்தப்படும் அழிவாகும். குறுங்காலக் கண்ணோட்டத்தில் ராஜீவ் அரசாங்கம் இதனைப் பார்க்காது நீண்ட காலக் கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும். ஜே. ஆர். அரசாங்கமும் அமெரிக்காவும் நீண்டகால நோக்கில் இவ் ஒப்பந்தத்தின் மூலம் தனித்தனியாகவும், கூட்டாகவும் தமிழ் மக்களையும், இந்தியாவையும் தோற்கடிக்கும் வகையில் செயற்பட்டு வருவது தெளிவாகிறது.

அமெரிக்காவிடமும், ஜே. ஆரிடமும் இவ் ஒப்பந்தத்தின் மூலம் இந்திய அரசு தோல்வி அடைந்துள்ளது. அவசரப்பட்டு இவ்வாறு ஓர் ஒப்பந்தம் செய்யவேண்டாமென சோவியத் யூனியன் இந்தியாவுக்கு ஆலோசனை வழங்கியதாகக் கூறப் படுகிறது. (LG/15/10/1987/P-6). அமெரிக்காவின் சதியைச் சோவியத் யூனியன் புரிந்திருந்தது. ஆயினும் ஒரு புறத்தில் இந்தியாவைப் பகைக்க விரும்பாமல் முடிந்தவரை உறவைப் பேணவும் மறுபுறத்தில் ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைத் தீவில் அமெரிக்காவின் இராணுவப் போக்குத் தடைப்படக்கூடிய தாகவும் இருந்ததாலேயே சோவியத் யூனியன் இவ் ஒப்பந்தத்தை பின்பு ஆதரித்தது. எனவே ஆழமாக நோக்குமிடத்து இவ் ஒப்பந்தமானது அமெரிக்கா சதிகாரத்தனத்தின் மூலம் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் ஏன் இந்தியாவுக்குமே கேடு விளைவிப்பதைக் காண முடிகின்றது. மேலும் இவ் ஒப்பந்தம் சம்பந்தமாக ஜே. ஆரின் அணுகுமுறைகளை நாம் நோக்கலாம்.

ஜே. ஆர். ராஜீவை அரசியலில் ஒரு சிறுவனாகவே கருதுபவர். இதனை வெளிப்படுத்தும் வகையில், பல முறை, பல்வேறு வகையாகக் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக இந்திரா காந்தியின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள இந்தியா சென்றிருந்தபோது தன்னை ராஜீவுக்கு அறிமுகம் செய்த சந்தர்ப்பத்தில் ''உங்கள் பாட்டனார் காலம் தொட்டு உங்கள் குடும்பத்தை எனக்குத் தெரியும்'' என ஜே. ஆர். கூறியிருந்தார். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் ராஜீவும், ஜே. ஆரும் கலந்துகொண்ட சார்க் (SAARC) மாநாட்டின்போது ''ராஜீவ் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபோது நான் சான்பிரான்சிஸ்கோவில் சர்வதேச மாநாடு ஒன்றில் உரையாற்றிக் கொண்டிருந்தேன்'' என்று ஜே. ஆர். மிகவும் சாதாரணமாகப் பேசினார். ஜே. ஆரின் திறமையையும், இராஜ தந்திரத்தையும் நாம் குறைத்து மதிப்பிடு செய்யக்கூடாது. ஒரு பெரிய நாட்டின் முன் ஒரு சிறிய நாடு பலப்பரீட்சையில் மிகவும் பலவீனமானதே. ஆயினும் தனது இராஜ தந்திரத்தினால் சூழலுக்கு ஏற்ப செயற்படுவதன் மூலம் மிக இலகுவாக இந்தியாவை ஏமாற்றிவிட முடியுமென ஜே. ஆர். நம்புகிறார். அதற்கேற்ப தனது கைவண்ணத்தை ஒப்பந்தத்திலும், அதன் பின்பு வந்த நடவடிக்கைகளிலும் அவர் பிரதிபலித்துள்ளார். இதனை விளக்குவதற்கு அவரின் தனிப்பட்ட திறமைகளைச் சற்று நோக்கவேண்டும் அவர், வாழ்க்கை வரலாறு, இராஜதந்திரம், இராணுவ அரசியல் ஆகிய மூன்று விடயங்களிலும் ஆழமாக வாசிக்கும் பழக்கமுடையவர். நெளிவு சுழிவான தீர்மானங்களை எடுப்பதிலும் காணப்படும் சூழலை ஏற்ற முறையில் பயன்படுத்துவதிலும் திறமைவாய்ந்தவர். இவ்வகையில் இலங்கைப் பிரச்சனையிலும் ராஜீவை மிக இலாபகரமாக ஜே. ஆர். ஏமாற்றியுள்ளார். ஒரு தனிப்பட்ட ராஜீவை ஜே ஆர். ஏமாற்றியதில் எமக்குக் கவலை இல்லை. ஆனால் ஜே. ஆரினால் ராஜீவ் ஏமாற்றப்பட்டதால் தமிழ் மக்களது நலன்கள் அழிக்கப்பட்டதுடன் இந்தியாவும் தனக்குரிய பலத்தை இங்கு இழப்பதையும் காணலாம்.

பிரச்சனையை எதிர்கொள்ள முடியாத அளவிற்கு அதாவது மீளமுடியாத அளவுக்குச் சிக்கலாக இருந்த சூழலில் இவ் ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதன் மூலமே தனது நிலையைத் தக்க வைக்க முடியும் என்பதாலும், அமெரிக்காவின் நிலைப்பாடும் அவ்வாறே என்பதாலும் இந்தியாவை நீண்டகாலப் போக்கில் தோற்கடிக்கலாம் என்பதாலும் ஒரு பொய்யான விட்டுக்கொடுப்பைக் கொண்டு ஏமாற்றகரமான, தந்திரோபாயரீதியிலேயே

ராஜீவுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். நீண்டகால அரசியல் கண்ணோட்டத்தில் நாம் பின்வருமாறு மதிப்பீடு செய்யலாம். இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ஜேர்மன் படைகள் பிரான்சை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தபோது பிரான்சின் தளபதியான டீ கோல் அப்போதய பிரித்தானிய பிரதமரான சர்ச்சிலிடம் அப்பிரச்சனையை எவ்வாறு கையாளலாம் என ஆலோசனை கேட்டபோது மக்களை ஆயுதபாணிகளாக்குவதன் மூலம் கெரில்லாப் போர் முறையைக் கையாண்டு ஜேர்மன் படையைத் தோற்கடிக்கலாம் எனக் குறிப்பிட்டார். அக்கருத்துப் பற்றி டீ கோல் குறிப்பிடும்போது "இராணுவ ரீதியாகப் பார்க்கும்போது சர்ச்சில் சொல்வது சரி, ஆனால் அரசியல்ரீதியாகப் பார்க்கும்போது பிழையானதே. அதாவது மக்களை ஆயுதபாணிகளாக்கும்போது இங்கு வளர்ந்துவரும் கம்யூனிஸ்டுகளின் கைக்கு ஆயுதங்கள் போய்ச் சேரும், அதன் மூலம் கெரில்லாப் போரில் ஜேர்மனியைத் தோற்கடித்து கம்யூனிஸ்டுகள் ஆட்சியை ஸ்தாபித்துவிடுவார்கள். ஒருவேளை ஜேர்மனியின் கையில் ஆட்சி அதிகாரம் இருக்குமேயானால் நேச நாடுகளின் உதவியோடு 'தேசபக்த'ப் போரால் நாம் மீண்டும் ஆட்சிக்கு வரமுடியும். மாறாகப் பிரஞ்சு கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்துவிட்டால் அவர்களை நாம் வீழ்த்தவே முடியாது என்று கூறி ஜேர்மனியப் படைகளை பிரான்சைக் கைப்பற்ற விட்டார். பின்பு டீ கோல் எதிர்பார்த்தவாறே நிலைமை அமைந்தது.

இந்தியப் படையைக் கையாள்வதிலும் ஜே. ஆர்., டீ கோலின் தந்திரோபாயத்தையே பெருமளவு பின்பற்றியிருக்க வேண்டும். ஜே. ஆர். தனது அரசியல் வாழ்வில் பெருமளவு டீ கோலைப் பின்பற்றும் ஒரு நபராவார். ஜே. ஆரினது 1978-ம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டம் டீ கோலின் அரசியல் அமைப்புத் திட்டத்தை மிகக் கணிசமானளவு பின்பற்றி அமைக்கப் பட்டுள்ளது. அதனால் இலங்கையின் இன்றைய அரசியல் திட்டத்தை கோலிஸ்ட் அரசியற் திட்டமென அழைப்பதுண்டு.

9-10-87 அன்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கே. சி. பந்தின் முன்னிலையில் நிகழ்ந்த பத்திரிகையாளர் மகாநாட்டின்போது ஜே. ஆர். பின்வருமாறு கூறியிருந்தார். "இலங்கையின் வடபகுதியில் எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நான் இந்திய அமைதிகாக்கும் படையினை வரவழைக்காது விட்டிருந்தால் தென்னிலங்கைப் பயங்கரவாதிகளின் கரங்களில் எனது அரசை தாரை வார்த்துக் கொடுத்திருக்க வேண்டி ஏற்பட்டிருக்கும்' என்பதாகும். அதாவது இந்தியா

பலாத்காரமாகப் படையெடுத்திருந்தால் தென்னிலங்கையில் போராட்டரீதியாகத் தேசபக்த வடிவில் ஜனதா விமுக்தி பெரமுனை என்ற தீவிரவாத இயக்கம் வளர்ந்து காலகதியில் அதிகாரத்திற்கு வந்துவிடும் என்றும் அதில் தமது வீழ்ச்சி நிச்சயமானதென்றும் ஜே. ஆர். எண்ணியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது.

ஜே. வி. பி. என்று அல்லாது வேறு வழிகளிலும் பார்த்தாலும் கூட, இந்தியா பலாத்காரமாகப் படையெடுத்து தனது கட்டுப்பாட்டின் கீழ் முழுத்தீவையும் கொண்டுவந்து விட்டாலும் அதன் மூலம் யூ.என்.பி. அரசு கவிழ்வதுடன் பின்பு சிங்கள ஆட்சியாளர் ஒரு தேசபக்தப் போரை நடத்தினாலும்கூட இறுதியில் தமிழீழப் பிரதேசத்தைத் தவிர்த்த தீவின் ஏனைய பகுதியைத்தான் அவர்களால் மீட்கக்கூடும். அல்லது S.L.F.P.யுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்து ஒரு சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்திவிட்டதும் இந்திய அரசு மீளக்கூடும். இவ்வாறான நோக்கிற் பார்க்கும்போது அது எந்த வகையிலும் யூ. என். பி.க்கு பாதகமானதாகும். இவ்விரு நிலைகளிலுமே யூ. என். பி. அரசு ஆட்சி அதிகாரத்தை இழக்க வேண்டி ஏற்படும். அல்லது இந்தியா கைப்பற்றினால் இலங்கை பிரிவதிலேயே முடியும். இவ்விரு நிலைகளையும் தவிர்ப்பதற்கு ஜே. ஆரிற்கு ஒரே ஒரு வழிதான் எஞ்சியிருந்தது. அது தந்திரோபாயம் மிக்க ஒப்பந்த வழியேயாகும்.

அடிப்படையில் டீ கோலின் இறுதி இலட்சியமே இங்கும் ஜே. ஆரினதும் இறுதி இலட்சியமாய் இருந்துள்ளது. அதாவது டீ கோலின் இறுதி இலட்சியம் ஜேர்மனியை தோற்கடிப்பது. ஜே. ஆரினது இறுதி இலட்சியம் இந்தியாவைத் தோற்கடிப்பது. ஆனால் ஒரு வித்தியாசம் என்னவெனில் இந்தியப் படைகளை இந்திய அரசின் விருப்பப்படி படையெடுக்க விட்டுவிட்டால் அது என்ன வகையிலும் தனக்கு அழிவு. ஆனால் இந்தியப் படையினை ஜே. ஆர். தனது விருப்பப்படி வரவைத்தால் அது உடனடியாக ஜே. ஆரைப் பாதுகாப்பதுடன் நீண்ட காலத்தில் இந்தியாவை அவமானகரமாகத் துரத்தவும் முடியும் என்பதுதான். (நான் காரியவாதி) "I am a practical man" எனத் தன்னைப்பற்றி ஜே. ஆர். கூறும் வார்த்தைக்குப் பின்னால் இத்தகைய விளக்கங்களே பொதிந்து கிடக்கின்றன.

மேலும், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை 1918-ம் ஆண்டு லெனின் செய்துகொண்ட ப்ரெஸ்ட் லிடோவ்ஸ்க் (Brest Litovsk) ஒப்பந்தத்துடன் ஜே. ஆர். ஒப்பிட்டு 19-2-88 அன்று உரையாற்றி உள்ளார். "1918ம் ஆண்டு ரஷ்யாவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டு பெரும் அவலம் ஏற்பட்டபோது ரஷ்யாவிற்கு ஜேர்மனி

பெரும் அச்சுறுத்தலாக விளங்கியதெனவும், ஆகவே அதனுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்வதே சிறந்தது என லெனின் சமாதான ஒப்பந்தத்தினை மேற்கொண்டார் எனவும், அப்போது அவரது செயலுக்கு எதிர்ப்பு இருந்தாலும் பின்னர் அவர் செய்தது சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டது!'' என சுட்டிக் காட்டிய ஜே. ஆர். தொடர்ந்து கூறுகையில் ''பிரதமர் ராஜீவ் காந்தி நீட்டிய நட்புக் கரத்தினை நான் பற்றிக்கொண்டு சமாதான ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டேன். சமாதான ஒப்பந்தத்திற் கைச்சாத்திடுவது பிழையெனச் சிலர்கூறினார்கள்; சிலர் சரியென்றார்கள்; ஆனால் இன்னும் சில வருடங்களில் மக்கள் ஜே. ஆர். செய்தது சரியென்பார்கள்.''

[வீ. 6-4-88]

இங்கு முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன. ப்ரெஸ்ட் ஒப்பந்தத்தில் லெனினுடைய நோக்கம் உயர்ந்தது. ஆனால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஜே. ஆரின் நோக்கம் தாழ்ந்தது ஆனால் ஒரு ஒற்றுமை என்னவெனில் இரண்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ள தந்திரோபாயம் ஒன்றுதான். லெனினும் ஜேர்மனியைத் தோற்கடிக்கும் தந்திரோபாயத்தைக் கொண்டிருந்தார். ஜே. ஆரும் இந்தியாவைத் தோற்கடிக்கும் தந்திரோபாயத்தைக் கொண்டிருந்தார். இவற்றை விளக்குவதற்கு ப்ரெஸ்ட் ஒப்பந்தம் பற்றிய சில அம்சங்களை நாம் நோக்க வேண்டும்.

ப்ரெஸ்ட் ஒப்பந்தத்தில் ஜேர்மனியின் செயற்பாட்டை லெனின் ''உதவாக்கரைத்தனமான, அவமானகரம் மிக்க செயல்'' என வர்ணித்தார். இவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்குட்பட்ட அதன் மூன்றிலொரு பங்கு மக்கள் தொகையை உள்ளிட்ட பகுதியை ஜேர்மனியின் ஆதிக்கத்திற்கு விட்டுக்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. 1917 அக்டோபர் மாதம் ரஷ்யாவில் சோஷலிஸப் புரட்சி ஏற்பட்டது. 1918 முற்பகுதியில் சோவியத் ரஷ்யாவின் சில பகுதிகளைத் தனக்குத் தருமாறு ஜேர்மனி கேட்டது. ஒன்பது வாரப் பேச்சுவார்த்தைகளின் போதும், தனக்கு சாதகமான நிலை இல்லாததால் ஜேர்மனியின் தளபதி மாக்ஸ் ஹாஃப்மன் (Max Hoffman) சோவியத் ரஷ்யாவின் மீது படையெடுக்கத் தொடங்கினார். அவ்வேளை ஜேர்மனியின் வேண்டுகோள்படி ஒப்பந்தத்திற் கைச்சாத்திடுமாறு லெனின் வேண்டினார். (இப் பேச்சுவார்த்தையில் ரஷ்யா சார்பிற் தலைமை தாங்கியவர் ட்ரோஸ்கி ஆவார்.) போல்ஷிவிக் கட்சிக்குள் பெரும் எதிர்ப்பு கிளம்பியது. லெனின் கருத்தை எதிர்த்து கட்சியில் இருந்து மூன்றிலொரு பங்கினர் பிரிந்து

சென்றனர். எவ்வளவு எதிர்ப்பின் மத்தியிலும் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட வேண்டுமென்றும் அல்லது தான் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்யப் போவதாகவும் லெனின் கூறினார். இவ் ஒப்பந்தத்தை தந்திரோபாயரீதியானதாகவே கொள்ளுமாறும், ஜேர்மனியிடம் இழக்கும் பகுதியை தம்மால் மீண்டும் மீட்சு முடியுமென்றும், இன்று ஒப்பந்தத்திற்குப் போகத் தவறினால் சோஷலிஸ அரசு கவிழ்ந்துவிடும் என்றும், எனவே அதனைப் பாதுகாக்க தற்காலிகமானதாக நினைத்து ஒப்பந்தத்திற் கைச் சாத்திட வேண்டுமெனவும் லெனின் வற்புறுத்தினார். கற்பனை யாகவும், கண்மூடித்தனமாகவும் இதை எதிர்ப்பதில் அர்த்த மில்லை; வரலாற்றில் இருந்து படிப்பினைகளை புரிந்துகொண்டு இதனை நடைமுறைச் சாத்தியத்திற்கேற்ப அணுகவேண்டுமென எடுத்துரைத்தார். (LCW/Vo/1-27/PP 34-84). இதன் பிரகாரம் 3-3-1918 அன்று ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. ஆனால் முதலாம் உலகயுத்தத்தில் ஜேர்மனியினது தோல்வியுடன் இவ் ஒப்பந்தம் 11-11-1918 அன்று அற்றுப்போனது.

எனவே இவ்வாறான ப்ரெஸ்ட் ஒப்பந்தத்துடன் ஜே. ஆரும் தனது ஒப்பந்தத்தை ஒப்பிடுவது ஒன்றும் விளையாட்டல்ல. ஜேர்மனிக்கு ஏற்படுத்தியது போன்ற நிலையைத்தான் இந்தியா விற்கும் ஏற்படுத்த வேண்டுமென்ற கணிப்பீடு ஜே. ஆரிடம் இருக்கின்றது. யூ. என். பி.க்குள் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பிருந்த போது இதற்கு சம்மதிக்கத் தவறினால் தானும் பதவியை இராஜினாமாச் செய்யபோவதாக ஜே. ஆர். குறிப்பிட்டார். லெனின் செய்தது போலத் தானும் இதிற் சாதிக்கலாமென ஜே. ஆர். நம்பிச் செயற்பட்டுள்ளார்.

ஆகவே இந்தியாவை வீழ்த்துகின்ற, தோற்கடிக்கின்ற எண்ணமும் சதியும்தான் ஜே. ஆரிடம் இருந்துள்ளது. எனவே நியாயத்தின் பேரால் பலாத்காரமாக இலங்கைக்குள் புகவிருந்த இந்திய இராணுவத்தை, தனது அனுமதியின் பெயரால் புகவைப் பதன்மூலம் இலங்கையின் ஐக்கியத்திற்கு சவாலாக இருந்த நிலைமைகளை, இலங்கையின் ஐக்கியத்துக்கு அத்திவாரமாக மாற்றிக்கொண்டதுடன், இலங்கையின் ஐக்கியத்தை இந்தியாவின் மூலமாக உறுதிப்படுத்திக்கொண்டு, போராட்டச் சக்திகளை இந்தியாவின் உதவியுடன் அழித்துவிட்டு தேசபக்தியின் பெயரால் அவமானகரமான நிலையில் இந்தியாவை ஒருநாள் வெளியேற்றுதல் என்பதே ஜே. ஆரின் தந்திரமாக இருக்கும் என்பதில் நாம் சந்தேகப்படத் தேவையில்லை. காஷ்மீரப் பிராமணர்களின் தந்திரோபாயங்கள் எல்லாம் ஜே. ஆரின் நரித்தந்திரத்தின் முன்மண்டியிட்டுக் கிடக்கின்றன. ஜே. ஆர்.

அரசாங்கத்தைப் பார்த்து, மக்கள்மீது 'ஷெல்' அடிப்பதை ஏளனமாகக் கூறிய ராஜீவை "பஞ்சாபில் நானா மக்கள்மீது 'ஷெல்' அடிக்கிறேனா?" என்று இலங்கை ஆட்சியாளரைப் பார்த்துக் கேட்ட ராஜீவை, இலங்கையில் அதே தமிழ் மக்கள்மீது 'ஷெல்' அடிப்பவராக மாற்றியது ஜே. ஆருக்குக் கிடைத்த வெற்றியும், ராஜீவின் தோல்வியும் என்று சொல்வதைவிட வேறு எவ்வாறு குறிப்பிட முடியும்.

மேலும், இலங்கை மண்ணில் இந்தியாவிற்கு இருந்த ஒரேயொரு ஆதரவு தமிழ் மக்கள்தான். அந்த நட்பைப் பகைமையுள்ள முரண்பாடாக ஜே. ஆர் தனது தந்திரோபாயத்தின் மூலம் மாற்றியமைத்தார். ஜே. ஆரின் தந்திரத்திற்கு ராஜீவ் பலியாகிவிட்டார். ஒப்பந்தத்தினைச் செய்த ஜே. ஆர் ஆரம்பத்தில் தென்னிலங்கைப் பத்திரிகைகளை ஓரளவு தணிக்கை செய்வதாகக் கூறியிருந்தபோதும், பின்பு இதே பத்திரிகைகளை ஒப்பந்தத்திற்கு எதிராகச் சுதந்திரமாக எழுதவிட்டும், வேறுவகையிலும் தனக்கு அதிகப் பிரச்சினை இருப்பதாக இந்திய அரசிற்கு ஒரு தோற்றப்பாட்டினை ஏற்படுத்தி, உடனடியாக எதுவும் செய்யமுடியாது படிப்படியாகக் காலப்போக்கில்தான் ஏதாவது செய்யமுடியும் எனத் தன்னை இந்திய அரசிடம் காட்டிக்கொண்டும், காலப்போக்கில் செய்யலாம் என்ற வாக்குறுதியை அளித்துக்கொண்டும், மறுபுறமாக ஒப்பந்தத்தை மீறும் வகையிலே செயற்பட்டிருக்கிறார். கைது செய்யப்பட்டவர்கள், தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்குப் பொது மன்னிப்பு அளிப்பதாக ஒப்பந்தத்திற் கூறப்பட்டுள்ளபோதும் ஜே. ஆர் அதை நடைமுறைப்படுத்தவில்லை. இவ்வாறு பல விடயங்களும் காணப்படுகின்றன. அவற்றைப் பின்பு விபரமாக நோக்குவோம். எனவே இங்கு எமக்குத் தெளிவாகப் புரிவது ஜே. ஆர் தந்திரோபாயரீதியாக இந்தியாவை ஏமாற்றுகிறார் என்பதும், அதன் மூலம் தமிழரைப் பலவீனப்படுத்துகின்றார் என்பதுமே யாகும்.

**ஒப்பந்தம் முறிந்தமையும் இராணுவ நடவடிக்கைளும் :—**

பொதுவாக இவ் ஒப்பந்தம் தமிழ் மக்களின் தீர்வுக்கு உகந்ததல்ல என்பதை சகல போராளிக் குழுக்களும் கூட்டணியினரும் சொல்லி வந்தனர். குறிப்பாக இவற்றுள் பிரதான இயக்கமாகிய தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இது ஒரு பிழையான ஒப்பந்தம் எனக் கூறி அதனை மறுத்துரைத்த போதும், ஆயுதங்களைக் கையளித்து நடைமுறைப்படுத்திப் பார்க்க இணங்கியிருந்தனர். ஆனால் இது நடைமுறைப்படுத்த முடியாத அளவிற்கு ஜே. ஆரின் இராஜதந்திரமும், இந்திய இராஜதந்திரிகளின் எதேச்

சிதறப் போக்கும் காரணமாய் அமைந்தன. இவ் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாதுபோன படிமுறையான அம்சங்களை நாம் ஆழ்ந்து நோக்க வேண்டும்.

ஒப்பந்தம் எழுதிய மறுகணமே அதனைக் குலைக்கும் வகையில் ஜே. ஆர் கிழக்கிலங்கையில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கினார். இக்குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துமாறு ராஜீவ் அரசிடம் விடுதலைப் புலிகள், ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் (TULF) ஆகிய அமைப்புகள் தொடர்ச்சியாகக் கோரிவந்தபோதும் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளையும் ராஜீவ் அரசு மேற்கொள்ளவில்லை. நடைமுறையில் ஒப்பந்தத்தைக் குழப்புவதே ஜே. ஆரின் உண்மையான நோக்கமாகும். இந்த இடத்தில் குடியேற்றம் செய்யவேண்டாம் என்று உடனடியாகத் தடுத்திருக்க வேண்டிய பொறுப்பு இந்திய அரசையே சார்ந்திருந்தபோதும் இந்திய அரசு அதைச் செய்யத் தவறிவிட்டது.

இடைக்கால அரசாங்கம் அமைப்பது சம்பந்தமான நடவடிக்கையில் இடைக்கால நிர்வாகத்தின் தலைவராக மூன்று பெயர்களைத் தருமாறும் அதில் ஒருவரையே தான் நியமிக்கப்போவதாகவும் ஜே. ஆர் கூறியிருந்தார். உண்மையில் நிலைமையைக் குழப்புவதற்காகவே ஜே. ஆர் இந்த மூன்று பெயர்களைக் கேட்டிருந்தார். மூன்று பெயர்களைத் தருமாறு கேட்டதற்கு இந்தியா சம்மதித்திருக்கக் கூடாது. அதே வேளை இதில் முதலாவதாகக் குறிப்பிடப்படும் பெயரையேதான் நியமிப்பதாக ஜே. ஆர், தூதுவர் திட்சித்திற்கு வாக்குறுதி அளித்திருந்தார். மேலும் அம் மூன்று பெயரிலும் முதலாவதாக விடுதலைப் புலிகளால் கொடுக்கப்பட்ட பெயரை ஜே. ஆர் குழப்பும் நோக்குடனேயே நிராகரித்தார். இங்கு மூன்று பெயர்கள் என்ற விடயத்தில் இந்திய இராஜதந்திரம் ஜே. ஆரின் இராஜதந்திரத்தின் முன் தலைகுனிந்து நின்றது. தமிழ் மக்களுக்குரிய நிர்வாக அமைப்பில் இவ்வாறு ஒற்றை-இரட்டை பிடிக்கும் அவசியம் இருந்திருக்கக் கூடாது. தமிழ் மக்களின் பிரதிநிதியாக ஒரு பெயரை மட்டும் பிரேரிக்க வேண்டுமென ஜே. ஆர் கேட்டிருக்க வேண்டும். அல்லது அதற்கேற்ற வகையில் இந்தியா வழி செய்திருக்க வேண்டும். திட்சித்திடம் வாக்குறுதி அளித்தபோது முதலாவது பெயரையே தெரிவு செய்வேன் என ஜே. ஆர் கூறியிருந்தபோதும் நடைமுறைப்படுத்தாமைக்கு ஜே. ஆர் கூறிய காரணம் முதலாவது நபரான பத்மநாதன் இரண்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதாகும். இவ் விளக்கத்தினை திட்சித் 1987 செப்டம்பர் மாதம்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது கூறியிருந்தார். (மு. 20-9-88) ஆனால் பத்மநாதன் சம்பந்தப்பட்டிருந்த இரு குற்றச்சாட்டுகளும் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டதாகும். ஒப்பந்தத்தின்படி போராட்டத்தோடு சம்பந்தப்பட்ட சகல குற்றங்களும் ''பொது மன்னிப்புக்கு'' உரியவை என்று கூறப்பட்டிருந்தது. இதில் ஜே. ஆர் ஒருபுறம் தான்தோன்றித்தனமாகவும் மறுபுறம் இந்தியாவை ஏமாற்றும் வகையிலும் இன்னோர் வகையில் குறிப்பிடுவதாயின் ஒப்பந்தத்தைக் குழப்புவதிலுமே அக்கறையாயிருந்தார் எனலாம்.

இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இராணுவரீதியான மோதல் ஏற்படுவதற்கான சூழலைத் தோற்றுவிப்பதில் இலங்கை ஆட்சியாளர் இடையறாது ஈடுபட்டு வந்தனர். ஒப்பந்தத்தை மீறி சிங்களக் குடியேற்றங்களைத் தமிழ்ப் பகுதிகளில் மேற்கொண்டதன் மூலம் சூழலை அதிகம் குழப்பிவந்தனர். மேலும் ஒப்பந்தத்திற் குறிப்பிட்டவாறு ''பொது மன்னிப்பு'' என்பதன் பிரகாரம் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. இது ஒப்பந்தத்தின் மீதான நம்பிக்கையின்மையைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. ஒப்பந்தத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்தி தமிழ் மக்களை இந்திய அரசிற்கெதிராக சினங்கொள்ள வைப்பது இலங்கை அரசின் நோக்கமாய் இருந்தது. இதில் இந்திய அரசு தனக்குரிய பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட்டதெனலாம். 1988 அக்டோபர் மாதத்திற்கூட சிறைக்கைதிகள் விடுதலைகோரி உண்ணாவிரதமிருந்துள்ளனர் என்பதை இங்கு கவனத்திற்கொள்ள வேண்டும். ''பொது மன்னிப்பு'' பற்றி ஒப்பந்தத்தின் இரண்டாம் பகுதி பதினோராம் உட்பிரிவில் [2 (11)] பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் பிற அவசர கால சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்ட அரசியற் கைதிகள், மற்றவர்கள், மேற்கண்ட சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்கள், தண்டிக்கப்பட்டவர்கள், மற்றும் போராளிகள் அனைவருக்கும் சிறீலங்காவின் குடியரசுத் தலைவர் பொது மன்னிப்பை வழங்குவார்.''

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 17 உறுப்பினர்களை இலங்கைக் கடற்படை 5-10-1987 அன்று கடலில் வைத்துக் கைது செய்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் இவர்கள் கைது செய்யப்பட வேண்டியவர்களல்ல. அவ்வாறு கைது செய்திருந்தாலும் அவர்களை இலங்கையில் உள்ள இந்திய அதிகாரிகளிடமோ அல்லது ''அமைதிப்படை'' அதிகாரிகளிடமோ ஒப்படைத்திருக்க வேண்டும். இதில் ஒப்பந்தத்தின் பிரகாரம் தனக்குள்ள

கட்டுப்பாட்டை இந்திய அரசு நிறைவேற்றத் தவறிவிட்டது. கைது செய்யப்பட்டவர்கள் தான்தோன்றித்தனமாக இலங்கை அரசால் கொழும்பிற்கு அழைத்துச் செல்வதற்காக விமானத்தில் ஏற்றப் பட்டபோது கைதிகள் நஞ்சருந்தி 12 உறுப்பினர் மாண்டனர். இக் கைதிகள் விடயத்தில் இலங்கையரசு கடுமையாக நடப்பதனால், திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்த நிலையில் கொதிப்படைந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அகிம்சையில் நம்பிக்கையற்று, பொறுமையிழந்து ஆயுதரீதியான நடவடிக்கைக்கு தூண்டப்படுவர் என்ற எண்ணத்துடன்தான் இலங்கை அரசு கைதிகளை கொழும்பிற்கு இடமாற்றம் செய்ய முற்பட்டது.

சிங்கள அரசு எதிர்பார்த்தபடி குழப்பங்கள் ஏற்படத் தொடங்கின. குமரப்பா, புலேந்திரன் ஆகிய இரு கிழக்கிலங்கைப் பகுதிப் புலி இயக்கத் தளபதிகளின் மரணங்களைத் (இறந்த 12 உறுப்பினர்களில் இவர்கள் இருவரும் அடங்குவர்). தொடர்ந்து கிழக்கிலங்கையிற் சிங்களக் குடியேற்றங்கள் தாக்கப் பட்டன. இவை 8-10-87 இரவு நிகழ்ந்தன. 9-10-87 அன்று இலங்கை அரசு புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் அறிவிப்பை வெளியிட்டது. இதுவரை புலிகளுக்கும், இந்திய ''அமைதிப் படைக்கும்'' இடையில் எந்தவித மோதலும் ஏற்படவில்லை. 9-10-87 நள்ளிரவுக்குப் பின் ''அமைதிப்படை'' முதல் முறையாக இராணுவ நடவடிக்கையில் காலடி எடுத்து வைக்கத் தொடங்கியது.

முதலாவது இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளின் ''நிதர்சனம்'' எனப்படும் ஒளிபரப்புச் செய்யும் கருவிகளை 9-10-87 நள்ளிரவு கைப்பற்றியது. இரண்டாவதாக யாழ்ப் பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த ''முரசொலி'', ''ஈழ முரசு'' எனப்படும் இரண்டு தமிழ்ப் பத்திரிகைக் காரியால யங்கள் 10-10-87 அதிகாலை 5 மணியளவில் ''அமைதிப்படை'' யினரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டன. இதில் ''ஈழ முரசு'' பத்திரிகை விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டு வந்தது. ''முரசொலி'' ஒரு தனியார் நிறுவனத்தினரால் நடத்தப்பட்டு வந்தது. இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னரே ''அமைதிப் படைக்கும்'' எதிராக விடுதலைப் புலிகள் முதல் முறையாக ஆயுதந்தாங்கிய நடவடிக்கையில் 10-10-87 அன்று பிற்பகல் 2 மணியளவில் ஈடுபடத் தொடங்கினர்.

இவ்வாறு அமைதிப்படைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் உருவானது. இந்த யுத்தம் தோன்றிய துயரத்

தைப்பற்றி தமிழக முதல்வராயிருந்த எம். ஜி. இராமச்சந்திரன் கூறிய வாக்கியம் இங்கு கவனிக்கத்தக்கது:

"இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசும் இலங்கை இராணுவமும் இந்த 17 கைதிகளையும் இந்திய அமைதிகாக்கும் படையிடம் ஒப்படைத்திருந்திருந்தால் இன்றைய இந்நிலவரம் ஏற்பட்டிருக்க முடியாது". [TH/10/12/87]

எனவே இங்கு இராணுவ நட்வடிக்கையைத் தோற்று விப்பதில், ஒப்பந்தத்தைக் குழப்புவதில், இலங்கை அரசின் சதி முதன்மையான இடத்தை வகிக்கின்றது. இதனை மேலும் நிருபிக்கும் வகையில் இலங்கை அரசில் நிதி அமைச்சராக இருந்தவரும், முன்வரிசைக் கபினெட் உறுப்பினருமாய் ஒப்பந்தத் திற்கு ஆதரவு தெரிவித்து ஆரம்பத்தில் அரசுக்குள் செயற்பட்ட வருமான றொனி டி. மெல் என்பவர் பின்வருமாறு கூறியுள்ளார்: "இலங்கை - இந்திய உடன்பாடு ஒன்றரை மாத காலத்திற்கு வடக்கு, கிழக்கிற் சமாதானத்தைக் கொண்டுவந்தே இருந்தது. அச் சூழ்நிலையில் அது ஒரு நல்ல சாதனைதான். திரு. பிரேமதாசாவினாற்கூட அதனை மறுக்க இயலாது. அதன் பின் அரசாங்கத்தின் உள்ளிருந்தே சில சக்திகள் அதற்கு வேண்டு மென்றே வேட்டு வைத்துவிட்டனர்." [மு/5/11/88]

"பிரச்சினைமிக்க இவ் ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலன் களிற்கு எதிராகவே இலங்கையிற் செயற்படுத்தப்படுகின்றது என்பதை தி. மு. க.வும் ஏனைய எதிர்க்கட்சிகளும் ஆரம்பத்தில் இருந்தே கூறிவருகின்றோம்." [TH/16/10/87] என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி குறிப்பிட்டதையும் நாம் நோக்கலாம். இத்தகைய எச்சரிக்கைகளையெல்லாம் மீறி ராஜீவ் அரசாங்கம் பொறுப்பற்று செயற்பட்டுள்ளது.

இராணுவரீதியான மோதலை உருவாக்க வேண்டுமென்ற சிங்கள ஆட்சியாளரின் சதி வெற்றியளித்தது. தமிழ் மக்கள் பலியாகினர். இந்திய ஆட்சியாளரும் இதிற் தப்புக் கணக் குடன் செயற்பட்டுள்ளனர் எனத் தோன்றுகிறது. இவ்வாறான ஓர் இராணுவ நடவடிக்கையை எடுப்பதன் மூலம் பெரும் பான்மை இனமான சிங்கள மக்கள் மத்தியில் மனம் குளிரவைத்து இந்திய அரசுக்கு ஆதரவு பெறலாமென எண்ணியிருக்க வேண்டும் போலத் தோன்றுகிறது. ஆனால் இந்த இராணுவ நடவடிக்கை சிங்கள மக்கள் மத்தியில் இந்தியா பற்றி மேலும் அதிக அச்சத் தைத்தான் ஏற்படுத்தியது. இதனைப் பிறிதொரு இடத்தில் மேலும் விளக்கலாம்.

**இந்திய "அமைதிப்படையின்" இராணுவ நடவடிக்கைகளும் அதன் விளைவும் :—**

"சிறீலங்கா அரசால் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல், குண்டு வெடிப்பு ஆகியவற்றால் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்ததை எண்ணி நாங்கள் அதிர்ச்சியடைந்து கொண்டிருந்தோம்" (PM/S/July-Dec 1987 P-23) என ராஜீவ் காந்தி 1987 ஆகஸ்ட் 2-ம் திகதி தமிழகத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். எனவே இவ் ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களிற்கு பாதுகாப்பு ஏற்பட்டுள்ளதாக விவரித்தார்.

மேற்கண்டவாறு இலங்கை இராணுவத்தின் விமானக் குண்டு வீச்சு உட்பட்ட தாக்குதலைக் குறிப்பிட்ட ராஜீவ் இதனைக் கூறிய எழுபது (70) நாட்களுக்குள் தனது "அமைதிப்படை" மூலம் என்ன செய்யத் தொடங்கினார் என்பதை இப்போது பார்ப்போம்.

இந்திய அரசாங்கத்தின் முன்னாள் வெளியுறவுத்துறைச் செயலர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் குறிப்பிட்டது போல ஒரு முழு அளவிலான யுத்தமே நிகழ்ந்தது. [AW 4-3-88-P-62] கடற்படை, தரைப்படை, விமானப்படை ஆகிய மூன்றும் யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டன. அப்பாவி மக்கள் பெருமளவில் மாண்டனர். அக்பர் கிருஸ்ணாவின் கட்டுரையின், ஓர் இந்தியனின் பார்வையில் I.P.K.F. என்பது Innocent People Killing Force அதாவது அப்பாவி மக்களைக் கொல்லும் படை [IW/April/10-16-88/P-34] என்று வர்ணிக்கப்பட்டுள்ளமை கவனிக்கத் தக்கது. விமானப்படையின் தாக்குதல்களில், உதாரணமாக 27-10-87 அன்று பொதுமக்கள் கூடி நின்ற சந்தையின் மீது வீசப்பட்ட விமானக் குண்டுத் த்தாக்குதலில், பெண்கள், குழந்தைகள் உட்பட 55 அப்பாவி மக்கள் மாண்டனர். [இவ் விமானத் தாக்குதலை லெவ்டினண்ட் ஜெனரல் திபேந்திர சிங் ஒப்புக்கொண்டார் [LG/15-11-87/P-7]. தரைப்படையின் தாக்குதலின்போது உதாரணமாக யாழ்ப்பாணம் பொது மருத்துவசாலையின் மீது 23-10-87 அன்று நிகழ்ந்த தாக்குதலில் மருத்துவர்கள், ஊழியர்கள், நோயாளிகள் உட்பட மக்கள் மாண்டனர். கற்பழிப்பு நிகழ்வுகளில் உதாரணமாக கோப்பாய் என்னும் இடத்தில் 64 வயது பெண்கூட கற்பழிக்கப்பட்டு வைத்தியசாலையிற் சிகிச்சை பெற்றார் என்பது போன்ற செய்திகள் அதிர்ச்சியை ஏற்படுத்தி இந்தியப் பண்பாட்டை கேள்விக்குட்படுத்துகின்றன.

ஏ. பி. வெங்கடேஸ்வரன் குறிப்பிடும் பின்வரும் வாக்கியத்தினை நோக்குவோம்: "[இலங்கையின்] தமிழ் மாகாணங்களில் எமது இராணுவம் [இந்திய இராணுவம்] மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளால் ஏற்படுத்தப்பட்ட கசப்புணர்வு நீங்க பலதசாப்தங்கள் செல்லும். இராணுவரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், எமக்கொரு கறைபடிந்த வரலாற்றை உருவாக்கிவிட்டோம்." [AW/4-3-88/P-64] இந்திய இராணுவ நடவடிக்கை பற்றி இலங்கைத் தமிழ் எழுத்தாளர் ஒருவர் கூறும்போது "தமிழ் மக்களுக்கு ராஜீவ் அரசாங்கம் செய்த பாவங்களைக் கழுவுவதற்கு இந்தியாவின் கங்கை நதி போதாது" எனக் கூறுவது இந்திய இராணுவ நடவடிக்கையின் உச்சக் கட்டத்தையே குறிப்பதாக உள்ளது. இலங்கையில், இந்திய அமைதி காக்கும் படையின் சாதனைப் பட்டியல் கறைபடிந்த தொன்றாகும் என இந்திய இராணுவ தளபதி கல்கட்டை நோக்கி ஜே. ஆர் கூறினார் [W/17-1-88]. இலங்கை இராணுவத்தை நோக்கி இந்திய அரசு கண்டித்த காலம் மாறி இந்திய இராணுவத்தைப் பார்த்து இலங்கை அரசு கண்டித்த காலம் உருவாகியது.

எவ்வாறாயினும் இந்திய "அமைதிகாக்கும் படை" அபகீர்த்தி மிக்கதுதான் [FL/June 11-24-88/P-119] என்ற கருத்தினையும் கவனத்தில் எடுத்தல் பொருந்தும். மேலும், யாழ் நகரில் உள்ள சுவரொன்றில் பொறிக்கப்பட்டுள்ள பின்வரும் வாக்கியம் இந்தியாவின் ஆத்மாவை என்றும் ஈடாட்டும் தன்மையுடன், கலாபூர்வமாய் அமைந்துள்ளது. "கோட்சே காந்தியைத்தான் கொலை செய்தார், ஆனால் ராஜீவ்காந்தியோ காந்தீயத்தையே கொலை செய்துவிட்டார்."

ஒப்பந்தத்தின் மூலம் அரசியல்ரீதியாகத் தோல்வியடைந்த இந்திய அரசு, தனது இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவரீதியாகவும், மொத்தத்தில் தார்மீக ரீதியாகவும் தோல்வியடைந்துவிட்டது. இராணுவரீதியாக யுத்த முறையில் ஏற்பட்ட தோல்விகளிற்கு உதாரணமாக ஒன்றைக் குறிப்பிடலாம். இந்திய இராணுவ வட்டாரத்தை ஆதாரம் காட்டி எழுதப்பட்ட ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 1965-ம் ஆண்டு இடம்பெற்ற இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தின்போது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமொன்றினைக் கைப்பற்றுவதற்குக் கூர்க்கா படைப் பிரிவு 29 வீரர்களை மட்டும் இழந்து அதனைக் கைப்பற்றியது, இதற்காக அப்படைப் பிரிவிற்கு வீரசக்ர விருது கொடுக்கப்பட்டது. இதேபோல 1971-ம் ஆண்டு நிகழ்ந்த இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தில்

கூர்க்காப் படைப் பிரிவு 28 வீரர்களை மட்டும் இழந்து பெ
சாதனையை நிலைநாட்டியது. இதற்காகவும் அப்படை
பிரிவிற்கு வீரசக்ர விருது வழங்கப்பட்டது [LG/1-12-88/P-
ஆனால் இதே கூர்க்காப் படைப் பிரிவு யாழ்ப்பாணத்
நிகழ்ந்த இரு வார யுத்தத்தில் 70 பேரைப் பலி கொடுத்
இது இரண்டு தடவையும் பாகிஸ்தானுடன் நடந்த யுத்தத்
இறந்த கூர்க்காப் படையினரை விடக் கூடுதலான எண்ணிக்
யாகும். உலகின் நாலாவது பெரிய இராணுவம் மிகச் சி
தொகையினரான மக்கள் மத்தியில் வந்து நிகழ்த்திய யுத்
திற்காக "வீரசக்ர விருதுகளை" பெற்றுள்ளனர் என்ப
குறிப்பிடத்தக்கது. 1988 அக்டோபர் இறுதி வாரத்
யாழ்ப்பாணத்திலுள்ள அராலி என்னும் இடத்தில் வைத்
பிரயாணம் செய்துகொண்டிருந்த பெண்களை "அமைதி காக்
படை" பாலியல் ரீதியில் அவமானகரமாக நடத்தியுள்ள
[ST/6-11-88] என்ற செய்தி வெளிவந்துள்ளது. இது மேன்மே
மக்களின் மனதில் அழியாத சுறைகளை ஏற்படுத்தும்.

இந்திய "அமைதிகாக்கும்" படையினை சிங்கள ஆட்சியா
எத்தகைய எண்ணத்துடன் கையாள்கின்றனர் என்ப
அறிய அந்த ஆட்சியாளர்களின் வார்த்தைகளைச் ச
நோக்குவோம். "ஜனாதிபதி ஜெயவர்த்தனா புத்திக்கூர்
யுடனும் நிதானமாகவும் நடந்துகொள்ளாதிருந்திருப்
இலங்கை இராணுவத்தில் கடமையாற்றும் எத்தனை
ஆயிரம் இளைஞர்கள் உயிர்த் தியாகம் செய்யவேண்டி இ
திருக்கும்" (வீ. 25-3-88) என்று அமைச்சர் லயனல் ஜயதி
குறிப்பிட்டார். இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பு வைப்
போல் ஜே. ஆர் ஜெயவர்த்தனா பின்வருமாறு குறிப்பிட்ட
"இந் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாத்துச் சமாதானத்
ஏற்படுத்த, இந்திய அரசாங்கம் பணத்தை விரயம் செ
தனது படையினரையும் பலி கொடுத்துள்ளது" (வீ. 4-3-88)

தனக்கு எதிராக செயற்படக்கூடிய சூழலிற் காணப்ப
இந்திய இராணுவத்தினை, ஜே. ஆர் தமிழ் மக்களிற்கு எதிர
செயற்படக்கூடிய நிலைமைக்கு மாற்றி அதன் மூலம் த
மக்களிற்கு அழிவை ஏற்படுத்தி பாரத தேசத்தையே அபகீர்
குத் தள்ளியதில் பெரும் வெற்றியை ஈட்டித்தான் உள்ளார்.

அமெரிக்காவின் தந்திரம் :—

1962-ம் ஆண்டு சீன-இந்திய யுத்தத்தின் போது அமெரி
இந்தியாவிற்கு செய்த கேட்டினையும், தந்திரத்தினையும் இ
நினைவுபடுத்துதல் அவசியமாகும். சீன-இந்திய யுத்தத்

போது அமெரிக்கா இந்தியாவிற்கு ஒரு வரையறைக்குட்பட்ட உதவியினைச்செய்தது. ஆயுத உதவி வழங்கியதுடன் சி. ஐ. ஏ டெல்லியில் தங்கி நின்று ஆலோசனையும் வழங்கியது. இந்த யுத்தத்தில் அமெரிக்கா இந்தியாவிற்கு உதவி செய்தபோதிலும் இந்தியா இதில் வெற்றிபெறக்கூடாதெனத் திட்டமிட்டிருந்தது. இக்காலகட்டத்தில் சீன-அமெரிக்க உறவு நல்ல நிலையில் இருக்கவில்லை. அதேவேளை இந்திய-அமெரிக்க உறவு ஓரளவு இருந்தது. ஆனால் அமெரிக்காவின் சில திட்டங்களுக்கு இந்தியா ஒத்துப்போக மறுத்ததுடன் சிலவற்றை எதிர்த்தும் வந்தகாலம். குறிப்பாக சீனாவிற்கெதிரான அமெரிக்காவின் திட்டங்களுக்கு இந்தியா 1950களின் முற்பகுதியில் இருந்து மறுப்பு தெரிவித்து வந்தது. எனவே இந்நிலையில் சீனாவிடம் இருந்து இந்தியா அடிவாங்கி ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அதே வேளை சீனா பெரு வெற்றி ஈட்டாமற் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அமெரிக்கா திட்டமிட்டு இருந்தது. இருபெரும் ஆசிய நாடுகளாகிய சீனாவும்-இந்தியாவும் யுத்தத்தில் ஈடுபடுவது அமெரிக்காவிற்கு பலவகைகளில் நன்மையைக் கொடுக்கக்கூடியதாயும் இருந்தது.

மேலும் 1960களின் முற்பகுதியில் உலகிற் காணப்பட்ட முக்கிய தலைவர்கள் ஜவகர்லால் நேரு, நாஸார், மாசேதுங், குருசேவ், ஜோன். எவ். கெனடி என்போராவார். இவர்களுள் நேரு உலகிலுள்ள மிகப்பெரிய ''ஜனநாயக'' நாட்டின் தலைவர், ''ஆசியஜோதி'' என்று புகழ்பெற்று வந்தவருமாவார். எனவே மூன்றாம் உலகத் தலைவர்களின் ஆளுமை உலகில் வளர்வதை விரும்பாத அமெரிக்கா இந்த யுத்தத்தின் மூலம் இரு மூன்றாம் உலக நாடுகளின் தலைவர்களது நற்பெயரையும் கெடுப்பதுடன் குறிப்பாக உலகம் முழுவதும் ரோஜாப்பூவுடன் வலம்வந்த ''ஆசிய ஜோதியின்'' ஆளுமையையும் அவரது பஞ்சசீலக் கொள்கையையும் உலகரங்கில் உடைத்துக்காட்ட விரும்பியது. இந்த வகையில் சீன-இந்திய யுத்தத்தை அமெரிக்கா பெரிதும் விரும்பியதுடன் உதவி செய்வதுபோல நடந்து நேருவின் காலை வாரியும் விட்டது. நேரு உயிரியல் ரீதியாக 1964-ம் ஆண்டு இறந்தாலும், அரசியல் ரீதியாக சீன-இந்திய யுத்தத்தின் தோல்வியுடன் 1962-ம்ஆண்டே இறந்துவிட்டார் என்று கூறலாம்.

எனவே மேற்கூறியவற்றை கருத்திற் கொண்டு நோக்கினால் இலங்கை விவகாரத்தில் உதவி செய்யும் பாணியில் இந்தியாவை அமெரிக்கா மாட்டிவைத்ததுடன் ராஜீவின் ஆளுமையை வளரவிடாமல் இலங்கை விவகாரத்தில் சேவலப்படுத்தி முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டதெனலாம். இவற்றை ராஜீவ் புரிந்து

கொள்வாரா அல்லது தொடர்ந்து தனது ''நியூவேவ்'' ஆலோசகர்களின் ஆலோசனைகளைத்தான் பின்பற்றுவாரா என்பதிற்தான் இந்தியாவின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கா தனது நலன்களைப் பாதுகாத்துக் கொண்டது மட்டுமன்றி இந்தியாவை அவமானப்படக்கூடிய முறையில் மாட்டிவைத்ததுடன், உலக அரங்கில் ராஜீவின் ஆளுமையும், கௌரவமும் வளரத் தொடங்கும் ஆரம்பகட்டத்திலேயே அதனை அழித்துவிடும் வகையில் அமெரிக்கா இந்த ஒப்பந்த விவகாரத்திற் செயற்பட்டுள்ளதெனலாம். மொத்தத்தில் நோக்குவோமாயின் ''ஓரடி பின்னால் ஈரடி முன்னால்'' என்ற தந்திரோபாயத்தின் அடிப்படையில் தான் இந்தியாவை அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தின் மூலம் தோற்கடித்துள்ளது.

முடிவுரை :—

வி. ஆர். கிருஸ்ண ஐயர் கூறியுள்ளபடி இவ் ஒப்பந்தமானது பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட இலங்கைத்தமிழ்மக்களின் தலைமைகளுடன் கலந்தாலோசிக்காமல் இலங்கை, இந்திய அரசுகள் தம்மிச்சையாக முடிவிற்கு வந்து அதற்கு 'ஆமாம் போடுமாறு' மட்டும் தமிழ் தலைமைகளுக்கு அறிவிக்கப்பட்டது (IW/AP 10-7-88/P-39) என்ற கருத்து சரியானதே. அமெரிக்க, இலங்கை அரசுகளின் சதிக்கு ராஜீவ் அரசாங்கம் ஏமாந்து விட்டது. அதற்காக தமிழ் மக்களை இந்திய அரசு ஏமாற்ற முனையக்கூடாது. ஒரு கவிதை அடியை மனதிற்கொண்டு சொல்வதாயின் இவ் ஒப்பந்தம் ''இறந்து பிறந்த குழந்தை'' ஆகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையானது வெறுமனே தமிழின எதிர்ப்புடையதல்ல, அது அடிப்படையில் இந்திய எதிர்ப்பின் வெளிப்பாடாகும். இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை சமரசம் செய்துவைக்கப்படமுடியாத பண்பைக்கொண்டது. இலங்கையின் அரசியலில் பௌத்த சங்கமும், ஏனைய பௌத்த நிறுவனங்களும் ஆழமான ஆதிக்கம் செலுத்தும் காரணிகளாக உள்ளன. சில வேளைகளில் தற்காலிகமாக வெளிப்படைக்கு அது தணிந்து போகும் சக்திபோலத் தோன்றலாம். ஆனால் அது உரிய நேரத்தில் மீண்டும் சுவாலைவிட்டெழும். 1880களில் ஏற்பட்ட முதலாம் கட்ட சிங்கள பௌத்த மறுமலர்ச்சி, 1950களில் ஏற்பட்ட இரண்டாம் கட்ட சிங்கள பௌத்த மறுமலர்ச்சி என்பன குறிப்பிடத்தக்க முக்கிய விடயங்களாகும். 1950 களில் தோற்றம் பெற்ற புதிய தலைமுறையினரிடம் விட்டுக் கொடுப்

பற்ற எண்ணக்கருக்களே வளரத் தொடங்கின. ஒருபுறம் ஒடுக்குதலில் விட்டுக்கொடுப்பற்ற சிங்களத் தலைமுறையும், மறுபுறம் ஒடுக்கப்படுதலின் துயர அனுபவங்களினால் இனி எதனையும் விட்டுக்கொடுக்கக் கூடாதென்ற தமிழ்த் தலைமுறையும் இக் காலகட்டத்தில் இருந்து வளரத்தொடங்கின. எனவே எப்புறத்திலும் இந்த எழுந்த மாத்திரத்திலான சமரச முயற்சிகள் வெற்றியளிக்காது என்பதை உணர வேண்டும். எனவே இச் சமரசத்தில் ஈடுபடும் எந்தவொரு சக்தியும் தோல்வியிலேயே முடியும்.

இலங்கைத் தமிழ் மக்கள் நீண்ட காலமாகவே போராட்டப் பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் போது தமிழர் பக்கமிருந்துதான் பூரண சுதந்திரமென்ற கோரிக்கை முதலில் எழுந்தது. பிரித்தானியருக்கெதிரான பகிஷ்கரிப்புப் போராட்டமும் முதலிற் தமிழ்ப் பகுதியில்தான் 1930 களின் முற்பகுதியில் ஆரம்பமானது. மாணவர் அரசியல், இளைஞர் அரசியல் என்பன முனைப்புடன் தமிழ்ப் பகுதிகளில் உருவெடுத்துள்ளன. தோல்விகளின் மத்தியில்கூட விட்டுக் கொடுப்பின்றிப் போராடும் பண்பு வரலாற்றுரீதியாக வளர்ந்து வந்துள்ளது. இம் மக்கள் தமது தலைமைகளை நம்பி அவர்களைப் பின் தொடர்வதும், அவர்கள் பிழை விடும்பொழுது உடனடியாகவே தூக்கி எறிந்து விடுவதும் இவர்களிடம் வளர்ந்து வந்துள்ள பண்பாகும். இவர்களை இலகுவில் ஏமாற்றிவிட முடியாது அல்லது ஏமாற்றுதல் தொடர முடியாது. காலத்திற்கு காலம் இந்த வகையிற் தமிழ் மக்கள் தமது தலைமைகளையே மாற்றியுள்ளனர். ஒரு காலத்தில் ''பொன்னன் ஒரு விண்ணன்'' என ஜி. ஜி. பொன்னம்பலத்தைப் பற்றி புகழ்ந்தேற்றவர்கள் பின்பு அவர் உயிரோடிருக்கும்போதே அவரது தலைமையை முற்றாகவே தூக்கி எறிந்தனர். பொன்னம்பலம் தனது தொகுதியிற் கூடத் தோற்கடிக்கப்பட்டார்.

இந்திராகாந்தி இறந்தபோது முழுத் தமிழ்ப் பிரதேசமுமே சோகத்துள் மூழ்கியிருந்தது. சந்திக்குச் சந்தி இந்திராகாந்தியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு சோககீதம் எங்கும் இசைக்கப் பட்டது. ஒப்பந்தமும், அதனை நடைமுறைப்படுத்தற்கான இராணுவ நடவடிக்கைகளினதும் விளைவாகத் தமிழ் மக்கள் மத்தியில் தற்போதய மனநிலை முன் கூறியதற்கு நேர் எதிர்மாறாக உள்ளது. இந்தியாவை இரட்சகர் என்று பார்த்த மக்கள் இன்று அதனை இராட்சதன் என்று பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. இதற்கு முதற் பொறுப்பு ராஜீவ் அரசாங்கமே.

சிங்கள மக்கள் மத்தியில் இன அழிப்பு வாதத்தை வளர்த்து விட்டதில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு பெரும் சிங்களக் கட்சிகளுக்கும், வேறு உதிரிக் கட்சிகளுக்கும் பங்குண்டு. 1957-ம் ஆண்டு செய்யப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித் தெறியுமாறு பாதயாத்திரை சென்றவர்தான் ஜே ஆர். ஜெய வர்த்தனா. சிங்களக் கட்சிகள் போட்டிபோட்டு இன அழிப்பு வாதத்தை ஏற்று மேலும் வளர்த்தன. அவ்வாறாயின் இவர் களால் எவ்வாறு இந்த இன அழிப்புவாதத்தைத் தடை செய்ய முடியும். சிங்கள மக்கள் மத்தியில் இன அழிப்புவாதம் நிறுவனத் தன்மை பெற்றுள்ளது. எதிர்க் கட்சியில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காதான் ஆரம்பத்திலிருந்தே இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகவும், இவ் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட வேண்டிய ஒன்று (TG 6-10-88) என்றும் கூறியுள்ளதையும், ஆளும் கட்சியில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகையில் பிரேமதாஸா, தான் ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்பட்டதும் இவ் ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிட்டு இதற்குப் பதிலாக இந்தியாவுடன் ஒரு நட்புறவு ஒப்பந்தம் செய்யப்போவதாகவும் (TG/10-10-88) கூறினார். இது மட்டுமன்றி ஜனதா விமுக்தி பெரமுன என்று சிங்களத்தில் அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி (JVP) இயக்கத்தினர் தாம் இவ் ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகவும், யூதர் களுக்குத் தாயகம் அமைத்துத் தருவதாக 1919-ம் ஆண்டு கூறப் பட்ட பால்ஃபோர் பிரகடனத்திற்கு (Balfour declaration) இவ் ஒப்பந்தம் நிகரானதென்றும் இது இந்திய ஆதிக்க விஸ்தரிப்புப் பண்பைக் கொண்டுள்ள தென்றும், எனவே சிங்கள மக்கள் இதனை முழுமனதுடன் எதிர்க்கவேண்டுமென்றும் (GP/Fed/88-PP 2-3) கூறியுள்ளனர். எனவே சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இரண்டு முக்கிய கட்சிகளும் (U.N. P/SLFP), ஆயுதம் தாங்கிய முக்கிய இயக்கங்களும் (JVP) இவ் ஒப்பந்தத்தினை எதிர்க்கின்றன. அத்துடன் பௌத்த மகாசங்கமும் இதனை எதிர்க்கின்றது. எனவே ஆட்சியாளர் என்ற வகையில் நடைமுறைப்படுத்து வதற்கான முக்கியசக்தி சிங்கள ஆட்சியாளர் பக்கமே உள்ளது அவர்கள் அனைவரும் அடிப்படையில் ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்துவதில் விருப்பமற்றவர்கள். ஆகவே அடிப்படையில் அதிகாரமற்ற மாகாணசபை, பிற்காலத்திலும்கூட நடைமுறை ரீதியாக இது சாத்தியப்படப் போவதில்லை. எனவே இந்த ஒப்பந்தத்தில் சமாதானம் என்பது முயல்கொம்பே ஆகும்.

இதனைப் புரிந்து அமெரிக்க - இலங்கை ஆட்சியாளரின் சதி யின் வெளிப்பாடாய் ராஜீவ் அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் புரியும் இன ஒடுக்குமுறையை உடனடியாக நிறுத்தவேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களின் வீடுகளிலும் சன சமூக நிலையங்கள், நூலகங்கள் மற்றும் பொதுஇடங்களிலெல்லாம் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, சுபாஸ்சந்திரபோஸ், ராஜாஜி, அண்ணாதுரை, சுப்பிரமணிய பாரதியார், இந்திரா காந்தி போன்றோர்களின் உருவப்படங்கள் மாட்டப்பட்டிருக்கும். இவர்களை எல்லாம் போற்றற்குரிய வழிகாட்டியாகக் கொண்டு பாரத தேசத்தை தமது நேச பூமியாகவும் பார்த்தனர். ஆனால் ஒப்பந்தத்திற்கும் அமைதி காக்கும் படையின் நடவடிக்கைக்கும் பின்பு இந்தியத் தலைவர்களையும், அதன் பெருமைக்குரியதென்று கூறப்படும் சகல "பண்பாடுகளையும்" கேள்விக்குறியாக்கி விட்டனர். இலங்கைத்தீவில் சிங்கள மக்கள் எப்போதும் இந்திய எதிர்ப்புடையவர்கள். தமிழ் மக்கள்தான் இந்தியாமீது எப்போதும் நேச உணர்வைக் கொண்டிருந்தனர். தற்போது இலங்கையில் ராஜீவ் அரசாங்கம் சாதித்திருப்பதெல்லாம் தமிழ் மக்களின் வெறுப்பைப் பெற்றமையும், முழுத்தீவையுமே இந்தியா மீதான வெறுப்புக்கு மாற்றியுள்ளமையும்தான். எனவே ராஜீவ் காந்தி பாரத தேசத்திற்கு ஈட்டிக்கொடுத்த சாதனை என்னவெனில் இலங்கையில் தமிழரின் வெறுப்பைப் பெற்றமையும், உலகரங்கில் பாரத தேசத்தை அபகீர்த்திக்குத் தள்ளியமையாகும்.

தொடர்ந்தும் தமிழ் மக்களின் வெறுப்புணர்வையும், கசப்பையும் பாரத தேசத்திற்கு ராஜீவ் அரசாங்கம் ஈட்டிக் கொடுக்கக் கூடாது. நடைமுறையில் ராஜீவ் அரசாங்கம் தவறிழைத்து விட்டது என்பது வெளிப்படையான உண்மை. எனவே இத்தவறை தொடர்ந்து செய்யாமல் தமிழ்ப் பகுதிகளில் சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தி தமிழ் மக்கள் தமது விருப்பப்படித் தம்மை நிர்ணயிக்க அனுமதிக்க வேண்டும். யார்தான் எவ்வளவு விரும்பினால் என்ன, விரும்பாதுவிட்டாலென்ன தற்போது ஐக்கிய இலங்கை சாத்தியப்படக் கூடியதாய்த் தெரியவில்லை. இலங்கையின் தென்பகுதியில் ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதன்மூலம் ஐக்கிய இலங்கையைப் பேணலாமென இந்தியா முற்படுமாயின் அதுவும் தோல்வியிலேயே முடியும். இலங்கையின் வரலாறு இவ்வாறான போக்கைத்தான் கொண்டுள்ளதென்பதை இந்திய ஆட்சியாளர் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் எழுந்த இயக்கங்கள் மத்தியில் காணப்படும் குறுகிய கண்ணோட்டங்களினாலும், இயக்க வேறுபாடுகள் திட்டமிட்டு வளர்க்கப்பட்டதனாலும், இயக்கங்களிடையே மோதலேற்பட்டு அவை மக்கள் முனையிலன்றி ஆயுத முனையால் தீர்க்க முற்பட்டமையாலும் இயக்கங்களிடையே

யான அரசியலில் தான் நினைத்தவாறு செயற்படக்கூடிய வாய்ப்பை ராஜீவ் அரசாங்கம் பெற்றதுடன் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய எஜமான் தானே என்ற ஸ்தானத்தையும் அது பெற்றுக்கொண்டது. போராட்டத்தின் முக்கிய அம்சமே ஓர் ஐக்கிய முன்னணியை அமைப்பது தான் என்பதை எந்தவொரு இயக்கமும் தலையாய அம்சமாய்க் கொள்ளவில்லை. மேலும், இயக்கங்களைப் பிரித்தாண்டதில் ராஜீவ் அரசாங்கத்திற்குப் பங்குண்டு என்று மக்கள் பொதுவாக நம்புகின்றனர். மொத்தத்தில் பாரததேசம்தான் இப்பிரச்சினையில் அவமானப்படுகின்றது.

எனவே ராஜீவ் அரசாங்கம் தனது தற்போதய சகல தீர்மானங்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும். அமெரிக்க அரசும், இலங்கை அரசும் தமிழ்ப் பகுதியில் யுத்தம் நிகழ்வதை விரும்புகின்றன. அவ்வாறாயின் இந்திய அரசு முதலில் யுத்தத்தை நிறுத்தவேண்டும். தமிழ் மக்களின் கோரிக்கையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் கடந்த காலத் தவறுகளை மறந்து தமிழ் மக்களின் நலன் கருதி சகல இயக்கங்களும் ஆயுதங்களை நாடாமல் மக்களை நாடுவதன் மூலம் தங்கள் முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். ராஜீவ் அரசாங்கம் தமிழ் மக்களைத் தனது பரிசோதனைக் களமாக பாவிக்கக்கூடாது. மிக நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் துன்பத்தையே அனுபவித்து வருகின்றனர். தவளையைப் பிடித்துக் கத்தியாற் கீறி வைத்தியம் படிப்பது போல இந்த அனாதரவான அப்பாவித் தமிழ் மக்களைப் பரிசோதனைக் களமாக்கி இந்தியா தனது இராணுவ அரசியல் உத்திகளுக்கான ஆய்வுக்கூடமாக நடத்தக்கூடாது. இது பாரததேசத்தின் மனச்சாட்சியையே உலுக்கும். பாரத தேசத்தின் பண்பாட்டையே அவமானத்திற்குள்ளாக்கும்.

இந்தியாவில் 1919-ம் ஆண்டு ஆங்கிலேயர் நிகழ்த்திய ஜாலியன் வாலாபாக் படுகொலையையும், அதனைத் தொடர்ந்த இராணுவ அட்டூழியங்களையும் பார்த்து ஜவகர்லால் நேரு பின் வருமாறு கூறினார்: ''ஏகாதிபத்தியம் எவ்வளவு காட்டுமிராண்டித்தனமானது, அறநெறி இல்லாதது, பிரிட்டிஷ் மேல் வர்க்கத்தினரது ஆன்மாக்களை அது எப்படி அழித்து விட்டதென்பதை முன்னெப்பொழுதும் கண்டிராத அளவுக்கு மிகவும் தெளிவாக நான் புரிந்துகொண்டேன் [அ.கொ/ஜ.நேரு/ P-107].'' இரவீந்திரநாத்தாகூர் பின்வருமாறு கூறினார்: ''அரசாங்கம் செய்த அருவருக்கத்தக்க குற்றங்கள்......இந்தியர்களின் பரிதாபகரமான நிலைமையை நினைவுபடுத்தும் ஈவிரக்கமற்ற அடி.'' [மேற்படி நூல்] மகாத்மா காந்தி இது சம்பந்தமாகக் கூறியதாவது. ''பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகாரத்தில் நீடிப்பதற்

காக, எந்த அளவுக்குப் போகக்கூடும், எதுவிதமனிதத்தன்மை யற்ற செயல்களையும், காட்டுமிராண்டித்தனங்களையும் செய்ய முடியும்." [மேற்படி நூல்]. இந்திய "அமைதிகாக்கும் படை" புரிந்த பல படுகொலைகளும், அழிப்பு வேலைகளும், மானபங்கப் படுத்தலும் 1919-ம் ஆண்டு பஞ்சாபில் நிகழ்ந்த ஒடுக்கு முறையைவிட மோசமானவை.

தொடர்ந்தும் ராஜீவ் அரசு தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இந்தியா மீதான கசப்பை வளர்த்துக்கொண்டு செல்லாமல் தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்பதன் மூலம் இந்திய மக்களும் தமிழ் மக்களும் ஒருவருக்கொருவர் துணையுள்ள அரசுகளாக இயங்கலாம். சிங்கள ஒடுக்குமுறையின் நிமித்தம் 1956-ம் ஆண்டின் பின்பு தோன்றிய தமிழ் தலைமுறை எப்படி சமரசத்திற்குத் தயாராய் வளர்ந்து வந்ததென்பதை இந்திய ஆட்சியாளர் உணரவேண்டும். எனவே தமிழ் மக்களின் நலன்களுக்கு விரோதமான பிழையான நடவடிக்கைகளினால் பாரததேசத்தின் மீது வெறுப்பை வளர்ப்பது நல்லதல்ல. இப்போதுள்ள கேள்வி இதுதான். தொடர்ந்தும் அமெரிக்காவினதும் ஜே. ஆர் அரசினதும் சதிக்கு இந்திய அரசு பலியாகப் போகிறதா? அல்லது தமிழ் மக்களின் உரிமையை ஏற்று இச் சதிகளை உரிய வகையில் தகர்க்கப் போகிறதா?

**இக்கட்டுரையில் குறிக்கப்பட்டுள்ள சஞ்சிகைகள், நூல்கள் ஆகியவற்றின் பெயர்களின் குறுக்கம்**

WT — WORLD TODAY

TH — THE HINDU (Madras)

THIE — THE HINDU INTERNATIONAL EDITION

TI — THE ISLAND (Sri Lankan News Paper)

W — WEEKEND

வீ — வீரகேசரி (கொழும்பில் இருந்து வெளியாகும் தமிழ்த் தினசரி)

மு — முரசொலி (யாழ்ப்பாணத்தில் வெளியாகும் தினசரி)

IW — ILLUSTRATED WEEKLY OF INDIA

FL — FRONTLINE

AW — ASIA WEEK

NW — NEWS WEEK

IA — INTERNATIONAL AFFAIRS

CW — CHRISTIAN WORKER

LG — LANKA GUARDIAN

ST — SUNDAY TIMES

PM — PRIME MINISTER RAJIV - ON FOREIGN POLICY - 1987/88

அ.கொ. — அ. கோரல், ஜவகர்லால் நேரு (சோவியத் வெளியீடு)

## பிழை திருத்தம்

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 13 | 1 | 1 | 1988 | 1987 |
| 31 | 3 | 15 | த்ரோஸ்கி | த்ரோத்ஸ்கி |
| 32 | 1 | 13 | LCW/Vo/l 27 | LCW/Vol/27 |

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் மூன்று அரசுகள் மிக நெருக்கமாக சம்பந்தப்படுகின்றன. அதில் அமெரிக்கா மறைமுகமாகவும் இலங்கை இந்தியா ஆகிய இரு அரசுகளும் நேரடி இணைகரங்களாகவும் செயற் படுகின்றன. இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவளிப்பது என் பது அமெரிக்கா, இலங்கை, இந்தியா ஆகிய மூன்று அரசுகளினது ஒடுக்குமுறைக்கு ஆதரவளிப்பதென்பதாகும். இம் மூன்று அரசுகளினதும் கூட்டுச் செயல்தான் இவ் ஒப்பந்தம் என்பதனையும், அதன் பெயரி லான இராணுவ ஒடுக்குமுறை என்பதனையும் ஐயந்திரிபற விளக்கு வதே இக்கட்டுரையின் பிரதான முயற்சியாகும். ராஜீவ் அரசாங்கத் தின் பலவீனத்தைப் பயன்படுத்தி அமெரிக்க, இலங்கை அரசுகள் இவ் ஒடுக்கு முறையை இந்தியா மூலம் நிறைவேற்றுகின்றன. "சுதந்திர இந்தியாவின் கடந்த 40 ஆண்டு கால வெளியுறவுக் கொள்கை வரலாற் றில் இழைக்கப்பட்ட மிகப் பெரிய தவறு இவ் ஒப்பந்தம்" என்று வர் ணிக்கப்படுவது சரியானதே. இவ் ஒப்பந்தம் உடனடியாக தமிழ் மக் களிற்குத் தீங்காகவும் நீண்டகாலத்தில் இந்தியாவிற்குத் தீங்காகவும் அமைகின்றது.

இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் தோற்கடிக்கப்படுவது தமிழ் மக் களுக்கு மட்டும் உரிய தோல்வியல்ல. எதிர்காலத்தில் இந்தியாவிற்கும் பெரும் தோல்வியாகும். இதனை இந்திய ஆட்சியாளர்கள் உணர வேண்டும். ராஜீவின் இந்த நடவடிக்கை, மரக்கிளையில் இருந்து கொண்டே அந்த மரக்கிளையைத் தறிப்பது போன்றதாகும்.

இவ் ஒப்பந்தத்தின் மூலமும் அதன் பின்னரும் ராஜீவ் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் இந்தியா அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் இலங்கை மண்ணில் தோல்வி கண்டுள்ளது. ராஜீவ் அரசாங்கம் என்றுமே அழியாதகறையை இந்தியாவிற்கு ஏற்படுத்தியுள்ளது.